இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No.QD/202/News/2019. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 143 | இதழ் : 01 | திகதி : 13.01.2019 | விலை : 30.00

## பொதுநிலையினரை இறைபணிக்கு அழைத்து ஊக்குவித்தவர் புனித யோசவ்வாஸ்

### அழைத்தல் ஆண்டின் ஆரம்ப நிகழ்வில் யாழ். ஆயர்



சில்லாலையில் அமைக்கப்பட்டுவரும் புனித யோசவ்வாஸ் மறைமாவட்டத் திருத்தலத்தில் கடந்த 12ம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற திருநாள் திருப்பலியைத் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்த யாழ். மறைமாவட்ட ஆயர் தனது மறையுரையில் மேற்கண்டவாறு கூறினார். அன்றைய தினம் இவ் ஆண்டு ஆயர் அவர்களால் அழைத்தல் ஆண்டாகப் பிரகடனம் செய்யும் நிகழ்வும் இடம்பெற்றது.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

## பாதுகாவலன் வர்ணத்தில்

பாதுகாவலன் பத்திரிகை 2019ம் ஆண்டு முதல் நான்கு வர்ண இதழாக மலரும் என்பதை வாசக நெஞ்சங்களுக்கு மிக மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றோம்.

கடந்த காலங்களில் இரு வர்ணங்களில் வெளிவந்தமை நீங்கள் அறிந்ததே. அச்சுப் பொருட்களின் விலையேற்றத்தின் மத்தியிலும் குறைந்த விலையில் பாதுகாவலனை விநியோகித்து வருகின்றோம். வர்ண இதழின் புதிய விலையாக ரூபா 30/= அமையும். வீட்டிற்கொரு பாதுகாவலன் வாங்கி பலன் பெறவும்.

இனிய
தைப் பொங்கல்
நல் வாழ்த்துக்கள்



## வடக்கின் புதிய ஆளுநர் யாழ். ஆயருடன் சந்திப்பு



வடக்கு ஆளுநராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி சுரேன் ராகவன் அவர்கள் யாழ். ஆயரை கடந்த 10ம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு ஆயர் இல்லத்தில் சந்தித்தார். இச்சந்திப்பில் ஆளுநர் ஆயரிடம் இறையாசீர் வேண்டியதுடன் சமகால வடக்கு கிழக்கு மக்களின் நிலை பற்றியும் எதிர்கால செயற் திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடினார். இச்சந்திப்பில் ஆளுநரின் செயலர் திரு. இளங்கோவன் அவர்களும் உடனிருந்தார்.

## யாழ். மறைமாவட்டத்திற்கு புதிய தியாக்கோன்கள் மூவர்



யாழ். மறைமாவட்டத்திற்கு புதிய தியாக்கோன்களாக மூவரை யாழ். ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை தை 10ம் திகதி புனித சவேரியார் குருமடத்தில் திருநிலைப் படுத்தினார். அருட்சகோதரர்களாகிய எஸ். அஜித் சுலக்ஷன், ஏ. லியான்ஸ், எம். அன்ரன் ஜெறாட் ஆகிய மூவருமே புதிய தியாக்கோன்களாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர். இப்புதிய தியாக்கோன்கள் பங்குத்தளப் பயிற்சிக்காக ஆயரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதே தினத்தில் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெறும் இறையியல் மாணவர்களுக்கான வேட்பாளர், வாசகர்கள், பீடத்துணைவர்கள் ஆகிய பட்டங்களும் ஆயரினால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகளை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்கலாநிதி T. J. கிருபாகரன் அடிகளார் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்.

## சில்லாலைப் பங்கில் நற்கருணைப் பணியாளர்கள் மூவர்



சில்லாலைப்பங்கில் நற்கருணைப்பணியாளர்களாக பணியாற்ற மூவர் ஏற்படுத்தப்பட்டுள்ளனர். திருமதி. ஜேன் தமயந்தி ஜோய் சுரேந்திரன், திரு சவிரிமுத்து ஜெறாட் கிறகோறிஸ் சசிந்திரராசா, திரு. அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் புதிய நற்கருணைப் பணியாளர்களாக யாழ். ஆயரினால் ஏற்படுத்தப்பட்டு பணியை ஆரம்பித்துள்ளனர். இவர்களுக்கான ஏற்படுத்தல் சடங்குத் திருப்பலியை யாழ் ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தை 6ம் திகதி காலை புனித கதிரை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுத்து இவர்களை நற்கருணைப் பணியாளர்களாக ஏற்படுத்தினார்.

## மேய்ப்புப் பணி மாநாட்டுத் தீர்மானத்தை அமுல்படுத்திய எழுவைதீவுப் பங்கு

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ் மறைமாவட்டத்தில் நடைபெற்ற மேய்ப்புப்பணி மாநாட்டில் எடுக்கப்பட்ட இரண்டு முக்கியமான தீர்மானங்களை எழுவைதீவுப் பங்கு மக்கள் தமது பங்கில் நடைமுறைப்படுத்தியுள்ளார்கள். இதுவரை காலமும் ஆலயத்தில் உரிமையற்றிருந்தோரை ஆலயத்தில் இணைத்து உரிமைகளை வழங்கியும், குழும வாழ்வு வாழ்வதற்கான அன்பியங்களை உருவாக்கி அன்பிய வாழ்வு வாழ ஆரம்பித்தும் தமது சாட்சிய வாழ்வை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

பங்குத் தந்தை அருட்பணி. P. F. ராஜசிங்கம் அடிகளின் நீண்ட கால முயற்சியாலும், அமலமரித்தியாகிகளின் மகா ஞானொடுக்கக் குழுவினரின் வழிகாட்டுதலாலும் கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற பங்கின் பாதுகாவலர் புனித தோமையாரின் திருநாளோடு மேற்படி நடைமுறைகள் அங்கு வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விசுவாசத்தை செயலில் காட்டவேண்டும் என்னும் மேய்ப்புப் பணி மாநாட்டின் கருப்பொருளுக்கு அமைவாக எழுவைதீவு மக்கள் பல தியாகங்கள் செய்து மேற்கொள்ளும் இம்முன்மாதிரிகை பாராட்டுதற்குரியது என்று புனித தோமையார் விழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்த யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்கலாநிதி. P. J. ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்ததுடன் பங்கு மக்களையும், பங்குத் தந்தையையும், அமலமரித்தியாகிகளின் குழுவினரையும் பாராட்டினார்.

### மண்டைதீவுப் பங்கிலும் நடைமுறையிலுள்ளது

ஏற்கனவே, மேற்படி மேய்ப்புப்பணி மாநாட்டுத் தீர்மானங்கள் அருட்பணி. M. டேவிட் அடிகளாரின் வழிநடத்துதலோடு மண்டைதீவுப் பங்கிலும் அமுல்படுத்தப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மகாகல்கமுவ புனித யோசவ்வாஸ் தேசிய திருத்தல வருடாந்த பெரு விழாவில் யாழ். ஆயர்

மகாகல்கமுவ புனித யோசவ் வாஸ் தேசிய திருத்தல வருடாந்த பெருவிழா தை 15ம் திகதி கொண்டாடப்படுகிறது. குருநாகல் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஹரல்ட் அன்ரனி ஆண்டகையின் கௌரவ அழைப்பின் பேரில் யாழ். ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் திருவிழாத்திருப்பலியை காலை 9 மணிக்கு தலைமையேற்று ஒப்புக்கொடுக்கவுள்ளார். இத்திருத்தலத்திலிருக்கின்ற புனித யோசவ்வாஸ் அடிகளாரின் திருச்சிலுவையானது கடந்த ஆண்டில் இலங்கையிலுள்ள அனைத்து மறைமாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டமை அனைவரும் அறிந்ததே.

# எமது எண்ணம்

## தை பிறந்தது வழி பிறந்ததா?

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழரின் வாழ்வியல் பழமொழி இதனை பன்னெடுங்காலமாக அரசியல் சமூகப் பொருளாதார வாழ்வியல் நிலைகளில் தமிழர்களாகிய நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம். சில சந்தர்ப்பங்களில் அது எமது வாழ்வில் நிதர்சனமாக அமைந்தாலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல காலங்களாக பொய்த்துப் போய் நிற்பதையே வரலாறு பதிவு செய்து வருகின்றது. அரசியல் ரீதியாக நாம் வேண்டி நிற்கும் நீதியுடன் கூடிய சமாதானத் தீர்வு வெறும் கானல் நீராகவே வரலாற்று நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்படுகின்றது.

2019ம் ஆண்டு பல்வேறு எதிர்பார்ப்புக்களுடன் பிறந்தது. 2018ம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட அதிரடியான அரசியல் மாற்றங்கள் என்று சொல்ல முடியாத அரசியல் கவிழ்ப்புக்களினால் தென்னிலங்கை அரசியல் நிலைகுலைந்து நின்றது. அந்நேரம் அதனை நிலை நிறுத்த முறிந்த மரத்திற்கு முண்டு கொடுப்பது போல் தமிழர்களின் பங்களிப்பு தென்னிலங்கை அரசியல் தலைமைகளுக்கும், அரசியல் வாதிகளுக்கும் தவிர்க்க முடியாத தேவையாக மாறியது. இந்த சந்தர்ப்பத்தை சாதகமாக பயன்படுத்தலாம் என எண்ணிக்கொண்ட தமிழ்த் தலைமைகள் தமது கைகளைக் கொடுத்து தற்போதைய அரசாங்கத்தை இலங்கை மண்ணில் மீண்டும் கட்டியெழுப்பியது.

தமிழ் அரசியல் தலைமைகள் சில நிபந்தனைகளை முன்வைத்து கவிழ்க்கப்பட்ட அரசாங்கத்தை மீண்டும் கட்டமைக்க தமது ஆதரவை நல்கியமை அனைவரும் அறிந்த விடயம். இது சிலரால் பாராட்டப்பட்டது. அரசியல் யதார்த்தத்தை நிதர்சனமாக தீர்க்கதரிசன பார்வையுடன் நோக்கிய பலரால் அது எதிர்க்கப்பட்டது. புதிய அரசியல் அமைப்பு விவகாரம் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, சிறைக் கைதிகளின் உடனடி விடுதலை, தமிழர்களின் மீட்கப்படாத பூர்வீக நிலங்களை இராணுவத்திடமிருந்து மீட்டெடுத்தல், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதாரங்களை மேம்படுத்தல் முதலான தமிழர்களின் முதன்மை பிரச்சினைகளை கையிலெடுத்து அவற்றுக்கான நிரந்தரமற்ற குறிப்பாக கூறுவதானால் போலியான ஓர் இணக்கப்பாட்டுடன் தமிழ் தலைமைகள் புதிய அரசாங்கத்துக்கு கைகொடுத்தது.

தை பிறந்தவுடன் மேற்படி விடயங்கள் அமுலாக்கப்பட்டு சுமூகமான தீர்வுகள் நம் கைக்கு நற்கனிகளாக கிடைக்கும், நாம் அவற்றை சுவைக்கலாமென ஒரு சிலர் கனவும் கண்டனர். நட்டாற்றில் கைவிடப்படும் நிலை நம் வாழ்வில் தொடர்வதால் நம்பிக்கெடும் இனமாக பூமிப்பந்தில் தமிழினம் நர்த்தனம் புரிகிறது. தற்போது இலங்கை அரசியலில் பிரதானமாக பேசப்பட்டு வந்த புதிய அரசியலமைப்பு விவகாரம் மெல்ல மெல்ல பிசுபிசுத்து தற்போது கைவிடப்படும் அபாய நிலை நோக்கி நகர்ந்து செல்கின்றது.

இலங்கை நாடாளுமன்றத்தில் அண்மையில் புதிய அரசியலமைப்புக்கான உத்தேச வரைவு நிபுணர் குழுவின் அறிக்கை தலைமை அமைச்சரால் முன்வைக்கப்பட்டது. பிரதான எதிர்க்கட்சி அதனை கடுமையாக எதிர்த்ததால் இணக்கம் எட்டப்படவில்லை. இணக்கம் காணப்படாவிட்டால் அந்த முயற்சியை முற்றாக கைவிட வேண்டி வரும் என்று தலைமை அமைச்சர் நாடாளுமன்றத்தில் வெளிப்படையாக தெரிவித்தார். எனவே இலவு காத்த கிளியின் கதையாக தமிழர்களின் கதை தை பிறந்த வாசலிலே வைத்து தவிடு போடியாக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் தலைமைகளும் தமிழ் மக்களும் யாது செய்யலாம்? என சிந்திக்க வேண்டிய தருணம் இதுவாகும். நம்பிக்கெடுவது எமக்கு புதிதான விடயமாக இல்லா விட்டாலும் இன்னும் எவ்வளவு காலம் ஏமாற்றப்பட்டு ஏதிலிகளாக தவிக்கப் போகின்றோம்? அரசியல் அநாதைகளாக எவ்வளவு காலம் அந்தரிக்கப் போகின்றோமா? போன்ற வினாக்களை தொடுத்து நாம் ஒவ்வொரு வரும் சிந்திக்க வேண்டும். சீரிய சிந்தனைகளால் பல்வேறு திருப்பங்கள் மனித குல வரலாற்றில் ஏற்பட்டுள்ளமைக்கு வரலாறு எமக்கு பாதை காட்டி நிற்கிறது. அத்தகைய வரலாறுகளையும் கடந்துபோன எமது கசப்பான வரலாறுகளையும் எமக்குப் பாடமாகக் கொள்வோம்.

முதலில் நாம் எமக்குள் ஒற்றுமைப்பட வேண்டும். தமிழர்களாகிய எமக்குள் ஒற்றுமையீனங்களும், வாய்ச்சொல்லில் வீரம் பேசி விட்டு மௌனித்து விடும் நிலைகளும், தீர்க்கதரிசனமற்ற பார்வைகளும், பிறர் சொல்வதை தட்டிக்கழிக்கும் மனப்பாங்கும், சந்திக்கு சந்தி கட்சிகளை கட்டியெழுப்பி எமது சுய நலன்களை அடைந்து கொள்வதற்காக அரசியல் இலாபமீட்டும் முதலாளித்துவ போக்குகளும் எம்மிடையே முற்றாக களையப்படா விடின் அல்லது களை எடுக்கப்படாவிடின் இலங்கை தீவில் தொடர்ந்தும் நாம் சிறுபான்மை இனமாக சிறுமையுற்றிருப்பதை தவிர எத்தனை தை பிறந்தாலும் வழி பிறக்காது. வடக்கு மாகாணத்திற்கு தமிழ் ஆளுநர் ஒருவர் இலங்கை அரச தலைவரால் நியமிக்கப்பட்டமை மாத்திரமே தை பிறந்தபோது எமக்குப் பிறந்த ஒரு வழியாகும்.

அரசியல் அமைப்பு முயற்சி தோல்வியுற்றால் விளைவு எப்படி அமையும் என்பதை சொல்ல முடியாது எனவும், பொன்னான சந்தர்ப்பத்தை தவற விடவேண்டாம் எனவும் தமிழ் அரசியல் தலைமைகள் மீண்டும் பல்லவி பாடத் தொடங்கியுள்ளது. இத்தகைய முகாரி இராகங்கள் ஒலிப்பதும் ஓய்வதும் இயல்பான ஒன்றாகையால் இவற்றிற்கு செவிமடுத்து நிற்பதை விடுத்து எதை? எப்படி? எவ்வாறு? எப்போது செய்ய வேண்டுமென்ற திடகாத்திரமான பாதை நோக்கி நாம் பயணிக்க வேண்டும். அதற்கு மேற்கூறப்பட்ட களைகளை எமது விளை நிலங்களில் இருந்து அகற்ற முயற்சிப்போம். நீதியுடன் கூடிய சமாதானத் தீர்வு தமிழர்களுக்கு இவ்வாண்டிலாவது கிடைக்க வேண்டுமென்ற யாழ் மறை மாவட்ட ஆயரின் கிறிஸ்மஸ் புத்தாண்டு ஆசிச் செய்தி நம் அனைவருக்கும் அமைதி தர பிரார்த்திப்போம்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# திருமுழுக்கைக் கொண்டாடுவது முக்கியம்



"எங்கள் வானகத்தந்தையே" என்ற தலைப்பில், தனது மறைக்கல்வியுரையை நிறைவு செய்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பின்னர் இந்த நிகழ்வில் அமர்ந்திருந்த எல்லோரையும் குறிப்பாக இளையோர் வயது முதிர்ந்தோர், நோயாளர் மற்றும் புதுமணத் தம்பதியரை வாழ்த்தினார். மேலும் ஜனவரி 13 ஆண்டவரின் திருமுழுக்கு விழாவைச் சிறப்பிக்கின்றோம். இத்துடன் கிறிஸ்மஸ் திருவழிபாட்டு காலம் நிறைவுறுகின்றது. இந்த விழா திருமுழுக்கு அருளடையாளத்தில் நாம் பெற்ற திருவருள் பற்றி நினைத்துப் பார்ப்பதற்கு அழைப்பு விடுக்கின்றது. இந்த அருளடையாளம் நம்மை கிறிஸ்தவர்களாக்கி கிறிஸ்துவோடும் அவரின் திருஅவையோடும் நம்மை ஒன்றிணைக்கிறது.

நாம் பெற்ற விசுவாசம் எனும் கொடைக்காக ஆண்டவருக்கு நன்றிசொல்வோம், இயேசுவுக்கு துணிச்சலான சான்றுகளாக வாழ்வதற்கு தூய ஆவியாரிடம் சக்தியைக் கேட்போம் என்று திருத்தந்தை கூறினார். அராபிய மொழி பேசுபவர்களுக்கு, குறிப்பாக மத்திய கிழக்குப் பகுதியிலிருந்து வந்திருந்த திருப்பயணிகளை வாழ்த்திய திருத்தந்தை, தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும் ஒருபோதும் மனம் தளராதீர்கள் இன்று நாம் காணும் கசப்பான நிலைகளை மாற்றியமைக்கும் சக்தியைக் கொண்டது செபம். நம்மைச் சுற்றியுள்ள காரியங்கள் மாறாவிடினும், நாமாவது மாறுவோம் என்றார்.

இவ்வாறு பல மொழியினருக்கு, தனது வாழ்த்துக்களைத் தெரிவித்து இறுதியில் தனது அப்போஸ்தலிக்க ஆசீரையும் அளித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# கற்பனை உலகில் அன்புகூரும் கனவில் வாழ்தல்

நமது எதிரிகளை அன்பு செய்து, அவர்களுக்காக செபிப்பது, இறைவனை உண்மையில் அன்பு செய்வதன் அடையாளம் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஜனவரி 10 வழங்கிய மறையுரையில் கூறினார்.

தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில் திருத்தூதர் யோவான் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசிக்கப்பட்ட வாசகத்தை மையப்படுத்தி தன் மறையுரை கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்

"தம் கண் முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்தமுடியாது" (1 யோவான் 4,20) என்ற இறைச் சொற்களை சுட்டிக்காட்டிப் பேசியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கண்ணால் காண்போரை அன்பு கூர இயலாதவர்கள், கற்பனை உலகில் அன்புகூர்வது போன்ற கனவில் வாழ்கின்றனர்.

நம் அயலவருக்காக, அவர் நமது எதிரியாகவே இருந்தாலும், அவருக்காக செபிப்பது, நாம் உண்மையில் அன்புள்ளவர்கள் என்பதன் முதல் அடையாளம் என்பதை தன் மறையுரையில் கூறினார் திருத்தந்தை.

அதே வண்ணம், அடுத்த வர் மீது பொறாமைக் கொள் ளாமல், அவருக்கு தீங்கு நினையாமல் வாழ்வது, உண்மை அன்புள்ளவர்கள் வெளிப்படுத்தும் இரண்டாம் அடையாளம் என்றும், அடுத்தவரைக் குறித்து புறணி பேசாமல் இருத்தல் மூன்றாவது அடையாளம் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

"இவ்வுலகு சார்ந்த எண்ணங்களை, நம்பிக்கை சார்ந்த எண்ணங்கள் வெல்கிறது. என் அருகில் இருக்கும் சகோதரர், சகோதரிகளிடம் கடவுள் இருக்கிறார் என்பதே அந்த நம்பிக்கை" என்ற சொற்கள், திருத்தந்தை வெளியிட்ட செய்தியில் இடம் பெற்றிருந்தன.

# பரிவினால் உருவாகும் கண்ணீர் இதயங்களையும், உணர்வுகளையும் தூய்மையாக்குகிறது

## திருத்தந்தை

"கடினமானச் சூழல்களைச் சந்திக்கும் வேளையில், கண்ணீர் வடிக்க அஞ்சவேண்டாம்: கண்ணீர் துளிகள், வாழ்வை வளப்படுத்துகின்றன. பரிவினால் உருவாகும் கண்ணீர், இதயங்களையும், உணர்வுகளையும் தூய் மையாக்குகிறது" என்ற சொற்கள், திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியாக வெளியாயின.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருஅவையின் தலைமைப்பொறுப்பை ஏற்ற 2013ம் ஆண்டு, செப்டம்பர் 16ம் திகதி திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாளன்று நிறைவேற்றிய திருப்பலியில், "சிலுவையின் மறைபொருளைப்புரிந்துகொள்ள, முழந்தாள்படியிட்டு செபிப்பதோடு, கண்ணீர் சிந்துவதும் உதவியாக இருக்கும். நாம் சிந்தும் கண்ணீர், இந்த மறைப்பொருளுக்கு அருகே நம்மை அழைத்துச் செல்லும்" என்று கூறினார்.

இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டு சிறப்பிக்கப்பட்ட வேளையில், போரினாலும், வன்முறைகளாலும் தங்கள் குழந்தைகளை இழந்து வாடும் பெற்றோருக்காக கண்ணீர் சிந்தி செபிக்குமாறு, 2016ம் ஆண்டு, மே மாதம் 5ம் தேதி, "கண்ணீரைத் துடைக்க" என்ற மையக்கருத்துடன் நடைபெற்ற ஒரு செப வழிபாட்டை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2015ம் ஆண்டு, பிலிப்பீன்ஸ் நாட்டில் மேற்கொண்ட திருத்தூதுப் பயணத்தில் பல்வேறு கொடுமைகளிலிருந்து காப்பாற்றப்பட்ட குழந்தைகளைச் சந்தித்தபோது, "கண்ணீரால் கழுவப்பட்ட கண்களைக் கொண்டு மட்டுமே, வாழ்வின் ஒரு சில கடினமான எதார்த்தங்களைக் காணமுடியும்" என்று கூறினார்.

# இளையோருக்காகச் செபிக்க திருத்தந்தை அழைப்பு

இளையோர் அனைவரும் தங்கள் தங்களின் மொழிகளில் உலகின் அமைதிக்காகச் செபமாலை செபிக்குமாறும் திருத்தந்தை கேட்டுக் கொண்டுள்ளார்

மத்திய அமெரிக்க நாடான பானமாவில், சனவரி 22ம் திகதி முதல் 27ம் திகதி வரை, உலக இளையோர் நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளவேளை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலக இளையோருக்காக, குறிப்பாக இலத்தீன் அமெரிக்க இளையோருக்காகச் செபிக்க அழைப்பு விடுத்துள்ளார்.

2019ம் ஆண்டு சனவரி மாதச் செபக் கருத்தில் இவ்வாறு கேட்டுக்கொண்டுள்ள திருத்தந்தை, இளையோர், குறிப்பாக, இலத்தீன் அமெரிக்க இளையோர், அன்னை மரியாவின் முன்மாதிரியைப் பின்பற்றி, இறைவனின் அழைப்பை ஏற்று, உலகிற்கு நற்செய்தியின் மகிழ்வை அறிவிக்கும்படி நாம் எல்லாரும் செபிக்குமாறு வலியுறுத்தியுள்ளார். ஜனவரி மாதச் செபக் கருத்து பற்றி, காணொளியில் பேசியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அனைத்து விதமான கலாசார, பொருளாதார மற்றும் சமூக வேறுபாடுகளைக் களைந்து, உலகின் பல பகுதிகளிலிருந்தும் பானமா நாட்டிற்கு வரவிருக்கும் இளையோர், தங்களின் மகிழ்வின் காரணத்தையும், தூண்டுதலின் ஊற்றையும் அன்னை மரியாவில் கண்டுகொள்ளுமாறு கூறியுள்ளார்.

அத்துடன், அன்னை மரியாவோடு சேர்ந்து, கிறிஸ்து பற்றி தியானிக்குமாறும் இளையோரை வலியுறுத்தியுள்ள திருத்தந்தை, இளையோர் அனைவரும், தங்கள் தங்களின் மொழிகளில், உலகின் அமைதிக்காகச் செபமாலை செபிக்குமாறும், கனவு காண்பதற்கு அன்னை மரியிடம் சக்தியைக் கேட்குமாறும் கூறியுள்ளார்.

# மறைந்துள்ள உன் புதையல் எங்கே?



**முகவுரை**

வல்லமைகளை விரும்புவதும், வியப்பதும், அவற்றிற்கு விருதுகள் வழங்குவதும் இவ்வுலகத்தின் இயற்கைக் குணம். இயற்கையின் சக்திகளைக் கண்டு மிரண்டு நிற்கிறது உலகம்.

**ஏழாவது அறிவை நோக்கி நகர தன்னைத் தயார் செய்கிறது மானுட அறிவியல். இந்நிலையில் ஈடிணையில்லாத வல்லமை பற்றிய உண்மையின் அறிவை இனங்காட்டும் ஒரு சக்திபற்றிய போலி-களைத் தோலுரித்து மனிதனை ஆண்டவருக்கு ஏற்புடையவராக்கும் ஓர் ஆற்றல் பற்றிய சில எண்ணக் குறிப்புகளை உங்களோடு பகிர விழைகிறேன்.**

தூய ஆவியானவர் கிறிஸ்தவனை இனங்காட்டும் ஒரு முத்திரையாக, செப ஊற்றை ஒருவனிடம் பீறிட்டெழச் செய்யும் வல்லமையாக, சாட்சிய வாழ்வின் உந்துவிசையாக, ஊனியல்புப் போராட்டத்தில் ஒரு போர் வாளாக, புதுப்பித்தலின் இயங்கு சக்தியாக இருக்கிறார். அவரின் வல்ல செயலாற்றங்களை சற்று இங்கே தரிசிப்போம்.

ஒரு புறத்தில் தூய ஆவியானவர் யாரென இனங்காட்டுவது கடினமான அதேவேளை, மறுபுறுத்தில் தமது வாழ்வை உருமாற்றத் தூய ஆவியானவருக்கே இசைந்து கொடுக்கும் மக்களின் வாழ்வில் அவரது செயற்பாடுகளை இனங்கண்டு கொள்வது மிகவும் எளிது. ஒரு கிறிஸ்தவனின் வாழ்வை தூய ஆவியா-னவர் உருமாற்றி, அவனது வாழ்விலே வியக்கத்தக்க மாற்றத்தைக் கொண்டு வரும்பொழுது, அத்தகைய மாற்றத்தை நம்மில் எவராவது கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. ஒருவரை இறைமனிதன் என்று இனங்காட்டுவதற்கு திருஅவையின் திருத்தந்தையர்கள் "ஆவியைக் கொண்டிருப்பவர்" என்று அழைத்தார்கள். இத்தகைய இறைமனிதர்கள் உடன்படிக்கையை உன்னதமாகக் கருதி வாழ்ந்தவர்கள். பழைய வாழ்வில் இருந்து புது வாழ்விற்குக் கடந்துவந்தவர்கள்.

அதற்கு எதிர்மாறாக ஆவியைக் கொண்டிராத ஒருவர் இருளில் வாழ்கின்றார். இறைவினடமிருந்து தொலைவில் வாழ்கின்றார். "வாக்குறுதியைக் கொண்டிருந்த உடன்படிக்கைக்கு அந்நியர்களாகவும் எதிர்நோக்கில்லாதவர்களாகவும்" (எபே 2:12) வாழ்கின்றார்.

ஆவியைப் பெற்றுக்கொண்டதினால் "இறைதன்மையில் பங்கு பெறுகின்றோம்". (2பேதுரு 1:4) புனிதத்தன்மை என்பது கிறிஸ்து வழியாக தூய ஆவியில், இறைதன்மையில் பங்கு கொள்ளலாகும். ஆவியானவர் இல்லாமல் "நாம் அந்நியர், வேற்று நாட்டினர். ஆனால் ஆவியிலோ இறைமக்கள் சமுதாயத்தின் குடிமக்கள். கடவுளின் குடும்பத்தில் சேர்ந்தவர்கள்". (எபே 2:19).

**ஆயத்தம் செய்பவராக**

இறைதந்தை தூய ஆவி வழியாக எம்மில் எவ்வாறு செயலாற்றுகின்றாரென்றால் நம் மனித உள்ளங்களில் கிறிஸ்து உறையத் தொடங்குகின்றார். "நீங்களும் உங்களுக்கு மீட்பளிக்கும் நற்செய்தியாகிய உண்மையின் வார்த்தையைக் கேட்டு, அவர் மீது நம்பிக்கை கொண்டு, வாக்களிக்கப்பட்ட தூய ஆவியால் அவருக்குள் முத்திரையிடப்பட்டீர்கள்" (எபே 1:13) நற்செய்தி முழுவதிலும் குறிப்பாக புனித பவுலின் திருமுகங்களிலே இது தொடர்பான கருத்து நிலவுகின்றது.

அதாவது "தூய ஆவியின் வல்லமையால்" (உரோ 5:19, கலா 3: 1:5, 1கொரி 6: 16, 1தெச 1: 4-5) வழங்கப்படும் விசுவாசம் என்னும் கொடையின்றி ஒருவர் தன்னை நற்செய்திக்கு அர்ப்பணிக்க முடியாது. எனவே விசுவசிப்பது என்பது இறை அருளாலும், தூயு ஆவி வழங்கும் உள்ளார்ந்த உதவிகளாலும் மட்டுமே நடைபெற முடியும். இத்தகைய அர்ப்பணம் கிறிஸ்து என்னும் நபருக்கு நம்மைக் கையளித்து அவரை நம் வாழ்வின் ஆண்டவரும் குருவுமாக ஏற்றுக் கொள்வதாகும்.

**செபம் செய்ய விரும்பு**

செபம் என்பதன் உண்மையான அர்த்தம் ஆன்மா இறைவனுடன் ஐக்கியமாவதாகும். " தூய மூவொரு கடவுளின் பிரசன்னத்தில் அவரோடு உறவாடும் பழக்கமே செப வாழ்வு. அது நிலையான ஆன்மாவை இறைவனை நோக்கி எழுப்புவதேயாகும்", என்று ஜோண் டமசீன் கூறுகிறார். இந்த விதத்தில் மனிதன் தானாகக் குரலெழுப்ப முடியுமேயொழிய செபிக்க முடியாது. இறைவனை நாடி அவரோடு ஐக்கியமாவது தான் செபமாகையால் அது எப்போதும் இறைவனது கொடையாகவே இருக்கிறது.

எனவே, நாம் யூதா எழுதிய திருமுகத்தில் கூறப்பட்டுள்ள அறிவுரையின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. "அன்

**அருட்பணி**
**மா.றேஜிஸ் இிராசநாயகம்**

பானவர்களே, தூய்மை மிகு விசவாசத்தை அடிப்படையாகக் கொண்டு உங்கள் வாழ்வைக் கட்டி எழுப்புங்கள். தூய ஆவியின் துணையுடன் வேண்டுதல் செய்யுங்கள். கடவுளது அன்பில் நிலைத்திருங்கள்". புகழ்ச்சியோ, நன்றியோ, மன்றாட்டோ, எல்லா வகையான செபமும் எப்போதும் தூய ஆவியின் துணையுடனேயே செபிக்கப்படுகிறது.

சமாரியப் பெண்ணுக்கு இயேசு கூறுவதுபோல ஒரு கிறிஸ்தவன் உண்மையிலும் ஆவியிலும் மெய்யான வழி-பாடு செய்பவனாக ஆவதற்கு இது ஒன்றே வழி.

**சாட்சிகளாய் செயலூக்கம் பெற**

கிறிஸ்துவின் சீடரைச் சாட்சிகளாக உருமாற்றுவதே தூய ஆவியின் செயலாகும். "தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். அவர் தந்தையிடமிருந்து வரும்போது என்னைப் பற்றிச் சான்று பகர்வார். நீங்களும் சான்று பகர்வீர்கள். ஏனெனில் நீங்கள் தொடக்க முதல் என்னோடு இருந்து வருகிறீர்கள்" (யோவான் 5:26-27) என்று இயேசுவே ஏற்கனவே கூறியிருக்கிறார். தூய ஆவியின் வல்லமையின் துணை கொண்டு கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வதென்பது, தன்னை முற்றும் உருமாற்றி, ஊடுருவி, எல்லா விடயத்திலும் அனைவருக்கும் முன்பாக பிரகாசிக்கும் இறை வார்த்தையால் ஒரு கிறிஸ்தவன் தன் வாழ்க்கையில் சந்திக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களில் மிகுந்த ஒளியோடு வெளிப்படுத்தும் எந்த சாட்சியத்திலும் மூலகாரணமாக இருப்பது தூய ஆவியின் செயற்பாடேயாகும். வேதசாட்சியாக மரிப்பது ஆதித் திருச்சபையினாலும், திருச்சபைத் திருத்தந்தையர்களாலும் புனிதத் தன்மையின் உச்சக்கட்டமாகக் கருதப்படுவதுடன், விசுவாசிகளுக்கு தூய ஆவியால் அருளப்படும் அதிமேலான கொடையாக எப்போதும் கருதப்பட்டது.

**தூய ஆவிதரும் வாழ்வில் வளர்ச்சி**

ஆயினும் கிறிஸ்தவனில் தூய ஆவியின் செயற்பாடு தானாக நிகழ்வதல்ல. ஏனெனில், கிறிஸ்தவன் தாானக செயலற்றிருப்பதில்லை. தூய ஆவியின் செயற்பாட்டுக்கு இடையூறாக இருக்கும் யாவற்றையும் தவிர்ப்பதன் மூலம் அவர் அவரோடு ஒத்துழைக்கிறான்.

**ஊனியல்பை உரிந்திட - கனிகள்**

தூய ஆவியின் துணை-யோடு செயற்படும் இந்த சுத்திகரித்தல், கலாத்தியருக்கும் (5:13, 16-18) உரோமையருக்கும் (8:1 - 12) எழுதிய திருமுகங்களில் ஊனியல்புகளுக்கு எதிரான போராட்டம் எனக் குறிப்பிடப் படுகிறது. மனிதன் ஏற்கனவே மீட்கப்பட்டு தூய ஆவியைப் பெற்றிருப்பது உண்மையாயினும், அவன் மீண்டும் ஊனியல்புக்குத் திரும்பும் சாத்தியக்கூறு எபபொதும் உள்ளது. மனிதன் தனது இயல்பில் வீழ்ச்சியடைந்தவன், மீட்கப் படாதவன், தனது சுயநலத்துக்கே அடிமையானவன். தானே தலைவன் என்னும் நோக்கில் எல்லாவற்றையும் நோக்குபவன்.

இந்த முற்றும் எதிரிடை-யான சக்தியிலிருந்து அவன் தன்னை விடுவித்துக் கொள்ள தூய ஆவியானவர் துணை புரிந்து வாழ்வின் அடிப்படை விதியை இறுக பற்றிக்கொள்ள உதவி செய்கிறார். வாழ்வின் அடிப்படை விதியென்பது இறைவன்மட்டிலும் தமது சகோதர சகோதரிகள் மட்டிலும் திறந்த உள்ளம் கொண்டவராக இருந்து, அன்பு என்னும் அளவுகோலின்படி தமது வாழ்க்கையை நடத்துவதாகும்.

ஊனியல்புக்கும் ஆவிக்குமிடையே போராட்டம் விசுவாசிகளின் உள்ளத்திலேயே நிகழ்கிறது என்பது தெளிவு.

**வாழ்வின் தூய்மையே - இறுதி இலக்காய்...**

திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரிலும் தூய ஆவி ஏற்படுத்தும் புதுப்பித்தல் அவனை இறை மக்கள் கூட்டத்தில் சேர்க்கிறது. திருமுழுக்கு, உறுதிப் பூசுதல் ஆகியவற்றில் அடங்கியுள்ள செல்வங்கள், பொறுப்புகளில் பங்கு கொள்ளும் ஒவ்வொருவிசுவாசியும் முழுக் கிறிஸ்தவ சமுதாயத்தினதும் அருங்கொடைப் பரிமாணத்தை மீண்டும் கண்டுபிடிக்கிறான். தூய ஆவியானவரே பொது நன்மைக்காக ஒவ்வொரு விசுவாசியிடமும் அநேக கொடைகளை அளித்து திருச்சபையினுள் பணியிலும் அருங்கொடைகளிலும் உள்ள பல்வகைப்பட்ட தன்மையை வெளிப்படுத்துகிறார். தூய ஆவியினது செயற்பாட்டின் விளைவாக இறைமக்களின் அருங்கொடைச் செல்வங்கள், தனிப்பட்டோர் அல்லது குழுக்கள் (பொது நிலை அமைப்புக்கள், இயக்கங்கள் அல்லது குழுக்கள்) அனைத்திலும் வெளிப்பாடு ஆகின்றது. இவற்றின் அடிப்படை திருமுழுக்கின் அழைத்தலை மீண்டும் கண்டுபிடித்து நற்செய்தி அறிவிப்பிலும், வாழ்க்கைத் தெரிவு-களைச் செய்வதிலும் முன்னதாகவே இருந்ததாகும்.

மேற்கூறியவற்றிலிருந்து, தூய ஆவி கிறிஸ்தவ வாழ்வின் இதயமாகவும் உயிர் மூச்சாகவும் உள்ளார் என்பதையும், தூய ஆவிக்கு பக்தி செலுத்துவது என்பதை விட, ஆவியை சுவாசித்து அவரில் வாழ்வதுதான் உண்மை என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளலாம்.

**உலகம் என்றுமே கண்டிராத**
**வல்லமை உமக்குள் -**
**உம் அழைப்புக்குள்**
**உம் ஆற்றலுக்குள் உறங்குவதால்**
**ஒரு புதுப்பித்தலுக்கு**
**நீங்கள் தயாரா?**

## புதிய பாதை



புதியதொரு நாள் பிறந்துவிட்டது. புன்னகை பூக்கின்ற முகங்கள் அகமகிழ்கின்றன. புதிய புதிய திட்டங்களும் சீர்திருத்தச் சிந்தனைகளும் வாழ்கை எனும் பூங்காவில் பறக்கவிடப்படுகின்றன. என்னை நானே தேடுகின்றேன். எனக்குள் பயணிக்க ஆரம்பிக்கின்றேன். நான் சென்ற பாதை சரிதானா? எனது வாழ்க்கையில் திருப்பம் தேவைதானா? சிந்தித்தவை பல பாதியிலேயே சிதைந்துவிட்டன என்பது உண்மைதானா? பழையதை பார்த்தது போதும். புதிய பாதையில் பயணிக்கலாமா?

என்னை, என்னைச் சூழவுள்ளவர்களை புதிதாகப் பார்க்கின்றேன். பார்த்துப் பார்த்து பழகிய எல்லோரும் எம்மவரே என்பது புலனாகின்றது. எவரையும் புறக்கணிக்கக்கூடாது என்ற எண்ணம் எழுகின்றது. வாழுகின்ற பாதையினை எல்லோருக்கும் வெளிக்காட்ட வேண்டும் என்ற ஆசை தெளிவாகின்றது.

**அருட்கலாநிதி வின்சன் பற்றிக் (அமதி)**

புதியதொரு உறவை ஆரம்பிக்கின்றேன். புதியதொரு உலகை உருவாக்கும் முயற்சியில் நானும் ஒரு பங்காளியாக முன் நிற்கின்றேன். எனது சிந்தனையில் புதியதொரு உணர்வு மீண்டும் அரும்புகின்றது. ஒன்றன்பின் ஒன்றாக சிறு சிறு முயற்சிகளாக நிறைவு செய்யும் எண்ணத்தோடு, வாழ்வித்து வளரும் நோக்கத்தோடு, மகிழ்வித்து மகிழும் மனப்பாங்கோடு, சமுதாய மறுமலர்ச்சிப் பயணத்தை நான் தொடர்கின்றேன்.

**காண்போம் புது உலகை**
**களைவோம் குறை முறையை**
**வளர்வோம் நிறை நெறியில்**
**வாழ்வோம் புது ஒளியில்...**
**2019 அழைத்தல் ஆண்டு அழைத்து நிற்கிறது..**

"தமக்காக மட்டும் வாழும் தனி மரங்கள் என்றும் கனி தரமாட்டா. நமக்காக மட்டும் வாழ்ந்தது போதும்.
நன்மை செய்வதே நம் பணி ஆகட்டும்"

# 200 ஆம் ஆண்டை நோக்கி பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

திருக்குடும்ப சபை 200 ஆம் ஆண்டை நோக்கி பயணிக்கும் இவ்வேளையில் அச்சபையின் வரலாற்றுத் தடங்கள் பாதுகாவலனில் தொடராக வெளிவரவுள்ளது...

*(சென்ற இதழ் தொடர்ச்சி....)*

**இப்பிரவேசம் ஏன்? எதற்கு?**

துறவறப்பயணம் என்பது சுகமும், சுவையும், மகிழ்வும், நிறைவும், போராட்டங்களும், சவால்களும், தெளிந்த நோக்கும், விரிந்த பார்வைகளும்,காலங்காட்டும் தூரச் சமிக்ஞைகளை உய்த்துணரும் துல்லியமான மனப்போக்கும், இலட்சியத் தெளிவும் சிலுவைகளைச் சுமக்கும் வீர மனமும், சேர வேண்டிய இடத்தையும் கடக்கவேண்டிய பாதைகளையும்,அடைய வேண்டிய அற்புத பயணப் பிரவேசமாகும்.

எனவே பயணத்தை சற்று நிறுத்தி விட்டு நாம் நடந்து வந்த பாதைகளை திரும்பிப் பார்க்கின்றோம். நாம் சரியான பாதையில் பயணித்தோமா? சரியான வேகத்தில் பயணித்தோமா? இவ் வேகத்தில் பாதையின் நோக்கையும், இலக்கையும் தெளிவாகப் புரிந்து கொண்டோமா? ஆவியானவரின் அசைவுகளையும், காலத்தின் தேவைகளையும், எம் துல்லியமான பார்வைகளால் உய்த்துணர்ந்து இறைபணியில் எம்மை கரைத்துக் கொண்டோமா? மாற்றத்தின் விடிவெள்ளிகளாகவும், அம்மாற்றத்தின் புதியபோக்குகளுக்குள் பலரை உள்வாங்கி எங்கும் எதிலும் பிரசன்னமாக உள்ள கடவுள் என்ற பேரன்புப் பெருக்கை பலர் காண வைத்தோமா? அவரைப் பற்றிய நற்செய்தியை உலகெங்கும் அறிவித்தோமா? அன்பு நிறை மாற்றுலகம் படைப்பதற்கு ஏதுவான மாற்றுமன உணர்வு, விழுமியங்கள், செயல்பாடுகள் என்பவற்றை எம் மனங்களிலும், பிறர்மனங்களிலும் பட்டுணர வைத்தோமா? பிரபஞ்சம் பற்றிய புதிய கண்ணோட்டம்பற்றிய புதிய அறிவைப் பலரிடம் பகிர்ந்து கொண்டோமா? எம் வாழ்வுப் பயணம் அர்த்தமுள்ளதாகவும், அர்ப்பணம் நிறைந்ததாகவும் இருந்ததா? இருக்கின்றதா? இருக்குமா? இதற்கே இப்பிரவேசம்.

**திருக்குடும்ப சபை எங்கு? எவ்வாறு? ஏன்? ஆரம்பிக்கப்பட்டது?**

1789 இல் பிரான்சில் நடைபெற்ற வரலாறு அதுவரை கண்டி ராத "அரசியல் புரட்சி" நாட்டின் வரலாற்றையே மாற்றி அமைத்தது. பிரான்ஸ், சாம்பல் பூத்த மேடாகவே அன்று காட்சி அளித்தது. இப்புரட்சி நாட்டை முற்றாக நலிவுறச் செய்தது.

அக்காலத்திருச்சபையும் இப்புரட்சி பலமாகப் பாதித்தது. இப்புரட்சியின் உச்சக் கட்டத்தினால் திருச்சபையும் ஆட்டங்கண்டது. 1793-1794 வரை "மிகப்பயங்கர ஆட்சியே" நடைபெற்றதை வரலாறுகள் கோட்டிட்டுக் காட்டுகின்றன. பிரான்சிய பயங்கர ஆட்சியின் அவலங்களும், "பியன்வெனுவின்" பிறப்பும் ஏக காலத்திலே நிகழ்ந்தன. 1793 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 27ஆம் நாள் போர்டோவில் பிறந்து வளர்ந்த குருவான இவர், தாம் வாழ்ந்த காலத்தின் தேவைகளுக்கும் அறிகுறிகளுக்கும் (Signs of the time) பதில் அளிக்கும் நோக்குடனேயே "திருக்குடும்ப சபையை" நிறுவினார்.

ஆசியின் அருங்கொடையைப் பெற்ற பியன்வெனு நோஆய் என்பவரால் திருச்சபைக்கு அளிக்கப்பட்ட கொடை

**அருட்சகோதரி நெவிஸ் லடிஸ்லாஸ்**
**திருக்குடும்ப சபை யாழ். மாகாணம்**

திருக்குடும்ப சபையே ஆகும். இதுதான் ஆரம்பக் கொடை. நிறுவுனர் தன் அடையாளத்தை (Identity) விட்டுச் சென்ற கொடை. அனைவரின் உந்து சக்தியாக இருந்து வழி நடத்திய கொடை வாழ்வின் எண்ணற்ற சவால்கள், போராட்டங்கள், அனுபவங்கள், அன்புள்ள இறைவனின் பராமரிப்பின் அடையாளங்கள், மரியாள் சூசையப்பரின் பரிந்துபேசுதல்கள் வழியாக, இறை ஒன்றிப்பிலும், இறைவார்த்தையோடுள்ள இடையறாத இணைப்பிலும், வளர்ந்த விருத்தியாகி உருவம்பெற்ற கொடை. இச்சபையானது, அன்றும் இன்றும், இனியும் காலத்தின் தேவைகளுக்கு பதிலிறுத்தது. பதிலிறுக்கின்றது. பதிலிறுக்கும்.

(தொடரும்

# "மாதகல் பதியின் காவலரே"




## அருட்பணி றெனோல்ட் ஜோர்ஜ் அவர்களின் மற்றுமொரு படைப்பு

மாதகல் புனித தோமையார் ஆலய 150வது வருட நினைவையொட்டி அவ் ஆலய பங்குக் குழாமால் "மாதகல் பதியின் காவலரே" என்ற இறுவெட்டு 28.12. 2018 அன்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது. இவ் இறுவட்டின் இசை, ஒருங்கிணைப்பு, தயாரிப்பு போன்ற முழுப்பொறுப்பையும் அருட்பணி றெனோல்ட் ஜோர்ஜ் அடிகளார் பொறுப்பேற்றிருந்தார். இந்நிகழ்வின் தலைவராக பங்குத்தந்தை அருட்பணி R.H.சகாயநாயகம் அவர்கள் செயற்பட்டிருந்தார். திரு ஜெயராட் தொகுப்பாளராகவும், அருட்பணி சுமன் மண்ணின் மைந்தனாக சிறப்பு அழைப்பை ஏற்று பங்கேற்றிருந்தார். பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட குருமுதல் வர் அருட்கலாநிதி P.J . ஜெபரட்ணம் அடிகளாரும், மதிப்பீட்டுரை ஆற்றுவதற்காக அருட்பணி செ.அன்புராசா (அ.ம.தி.) அடிகளாரும், ஏற்புரையை வழங்குவதற்காக அருட்பணி றெனோல்ட் ஜோர்ஜ் அடிகளாரும் வருகை தந்திருந்தார்கள்.

"மாதகல் பதியின் காவலரே" என்ற இறுவட்டில் 10 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. 4 பாடல்கள் லூர்த்து அன்னைக்காகவும், 3 பாடல்கள் புனித தோமையாருக்காகவும், மிகுதி ஒவ்வொரு பாடலும் புனித அந்தோனியார், புனித செபஸ்தியார், புனித சூசையப்பர் போன்றோருக்காகவும் இயற்றப்பட்டுள்ளன. திரு.C.சுதர்சன் இசையமைப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளார்.செவ்வன் ஜோயல் அபிஷன் உதவியாளராக கடமையாற்றியுள்ளார்.

பாடல் வரிகளை பங்கு குழாமில் இருந்தும் மற்றும் அருட்பணி. றெக்ஸ் சவுந்தரா, அருட்பணி. தயாகரன், அருட்பணி. அன்புராசா அ.ம.தி.போன்றோர் எழுதியுள்ளார்கள். இசைக்கு திரு ஜெயக்காந்தனும் இவ் அருட்பணியாளர்களும் மெருகூட்டியுள்ளார்கள். பாடல்களை திருமதி பாரதி கௌசீகன், திரு A.R.விஜயன், மதுஷிகன், சிந்துஜன், மதுஸ்ரீ, மதுஜா, விஜித்தா, றொசிற்றா, அருட்பணி றெனோல்ட் ஜோர்ஜ் போன்றோர் பாடியுள்ளார்கள். ஆசியுரையை யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் B.ஞானப்பிரகாசம் ஆண்டகை தந்துள்ளார். பங்குத்தந்தையும் தனது செய்தியை பதிவு செய்துள்ளார்.

**மதிப்பீட்டு உரை - அருட்பணி அன்புராசா**

இதயம் இரத்தத்தை சுத்திகரிக்கின்றது. வாசிப்பு மூளையைச் சுத்திகரிக்கின்றது. அதுபோல நல்ல இசை உள்ளத்தையும் உணர்வையும் எண்ணத்தையும் சுத்திகரிக்கின்றது. நல்ல இசை மனித இதயங்களை அசைய வைக்கும். ஏன் உயிரளிக்கும் ஆற்றல் படைத்தது. "கவிதை மொழிக்கு ஆடை கட்டிவிடுகிறது. இசையோ இறக்கை கட்டிவிடுகிறது!" என்ற கவிப்பேரரசு வைரமுத்துவின் வரிகள் இசையின் சிறப்பைக் கூறி நிற்கிறது.

'மாதகல் பதியின் காவலரே' என்ற இறுவட்டானது அருட்பணி.சகாயநாயகம் அடிகளாரின் முயற்சியில், அருட்பணி. றெனோல்ட் ஜோர்ஜ் அவர்களின் இசை இயக்கத்தில் வெளிவந்திருக்கிறது. அருட்பணி றெனோல் ஜோர்ஜ் அடிகளார் எங்கள் மத்தியில் மிளிர்கின்ற மிகச் சிறந்த ஒரு பாடகர், இசையமைப்பாளர், அருட்பணியாளர் என்பதை இவ்விடத்தில் குறிப்பிடுவது மிகப் பொருத்தமானது என நினைக்கிறேன்.

ஏறக்குறைய ஒரு மாதத்திற்கு முன்னரே இவ் இறுவட்டு என் கைகளில் கிடைத்தது. அந்நாளிலிருந்து, அனேகமாக என்னுடைய பிரயாணங்களின் போது, இவ் இறுவட்டினைத் தான் கேட்டு வருகிறேன். ஏறக்குறைய முப்பது தடவைகளாவது கேட்டிருப்பேன். எனினும், 'இன்னும் கேட்கலாம்' என்ற உணர்வே மிஞ்சிக் கிடக்கிறது. இது ஒன்றே, இவ் இறுவட்டு, மிகச் சிறந்த தரத்தில் - தன்மையில் இருக்கிறது என்பதற்கு ஒரு சான்று.

இந்நாட்களில் நமது பிரதேசங்களில் வெளியிடப்படுகின்ற சிறந்த இறுவட்டுக்களில் 'மாதகல் பதியின் காவலரே' என்ற இவ் இறுவட்டு மிகச் சிறந்த தரத்தில் ஆக்கப்பட்டிருக்கிறது என இச்சபையில் வெளிப்படையாகக் கூறுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

**இறுவட்டுக்களும் பாடல் வரிகளும்**

சில இறுவட்டுக்களுக்கு பாடல் வரிகள் நன்றாக இருக்கும், இன்னும் சிலவற்றுக்கு இராகத் தேர்வு சிறப்பாக இருக்கும், வேறு சிலவற்றுக்கு இசையமைப்பு அழகாக அமையும். ஆனால், 'மாதகல் பதியின் காவலரே' என்ற இவ் இறுவட்டில் பெரும்பாலான பாடல்களுக்கு, குறிப்பாக, 'லூர்து அன்னையே', 'புனிதர் எம் தோமாவின் புகழைப் பாடிடவே', 'மாபரனாம் யேசு பரிவுடனே எமக்கு ஈந்த', 'மாதகல் பதி யின் காவலனே', 'அற்புதப் புனித அந்தோனி முனியே ', 'பூந்தவிழ் தாதை புனித வளனே' போன்ற பாடல்களுக்கு பாடல் வரிகள், மெட்டுகள் (இராகம்), இசையமைப்பு எல்லாமே மிகச் சிறப்பாகப் பொருந்தி வந்திருப்பது உண்மையில் பாராட்டுதலுக்குரியது.

இசையமைப்பாளர் திரு.C.சுதர்சன் அவர்கள் பல இறுவட்டுக்களுக்கு இசை அமைப்பைச் செய்துள்ளார். இந்த இறுவட்டுக்கான இசையமைப்பு தனித்துவமான சிறப்பைக் கொண்டிருப்பதாகவே எனக்குத் தெரிகிறது. கேட்பதற்கு மிகமிக இனிமையாக இருப்பதை கலைஞர்கள் அனுபவிப்பார்கள் என்பதோடு, இவ் இறுவட்டில் உள்ள பாடல்களில் சில மக்களின் மனங்களில் நிச்சயமாக நின்று நிலைக்கப் போகின்றன என்பதையும் இவ்விடத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். மேலும், வழிபாட்டுப் பாடல்களாக இவை அமைக்கப்பட்டுள்ளன என்றாலும், விசேட விதமாக, ஆற்றுப்படுத்தும் தன்மை கொண்டவையாக இருப்பது இவ் இறுவட்டின் மேலதிக சிறப்பு எனலாம். அந்த வகையில், ஆலயத்தில் வழிபாட்டுப் பாடல்களாகவும், அதேவேளை தனியாக இருந்து இறை பிரசன்னத்தை சுவைக்க கூடியவையாகவும் இப்பாடல்கள் இருப்பது இவ் இறுவட்டின் விசேடத் தன்மை என்பேன்.

இவ் இறுவட்டின் பாடகர்களை நோக்குகிறபோது, அனைவரும் நம் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். தென்னிந்தியப் பாடகர்கள் இனித் தேவையில்லை எனக் கூறுபவர்கள் இருக்கிறார்கள். அக்கருத்தினை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். தேவைக்கு ஏற்ப அவர்களையும் பயன்படுத்தலாம் என்பது தான் என் கருத்து நிலை. ஏனெனில் தென்னிந்தியப் பாடகர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள இன்னும் ஏராளமானவை உண்டு என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. இது ஒருபுறமிருக்க, இங்கு நான் அழுத்திச் சொல்ல விளையும் ஒரு விடயமுண்டு. அதாவது, தென்னிந்தியப் பாடகர்களுக்கு நிகராகப் பல பாடல்களும், பாடகர்களும் நம் பிரதேசங்களில் வந்துகொண்டிருக்கின்றன, வந்து கொண்டிருக்கின்றனர். இவ் இறுவட்டின் சிறப்புக்கு பாடகர்களே முக்கிய காரணமாகும்.

**குறிப்பாக...**

சில பொதுவான குறிப்புக்களைச் சொல்லி நிறைவு செய்ய விரும்புகின்றேன். பாடல்களைப் பாடும் போது தமிழை தமிழாக உச்சரிக்கப் பாடகர்கள் பழகிக்கொள்ள வேண்டும். உதாரணமாக, 'வானம் விட்டு பூமி வந்த பாலன்' என்ற ஒரு கிறிஸ்து பிறப்புப் பாடல் இக்காலத்தில் பிரசித்தி பெற்று விளங்குகிறது. இதனைப் பாடுகின்ற பாடகர் பூமி என்ற வார்த்தையைப் 'பூமி' என்றும், 'பாலனை'ப் பாலன் என்றும் உச்சரிக்கிறார். பாடகர்கள் பொதுத் தமிழ் உச்சரிப்பைக் கடைப் பிடிக்க வேண்டும். வேற்று மொழி கலந்த உச்சரிப்பை தமிழ் உச்சரிப்புக்குள் திணிக்கக்கூடாது. பாடல்களை ஒலிப்பதிவு செய்யும் போது பாடலை எழுதிய பாடலாசிரியர் கட்டாயமாக இருக்கவேண்டும். உதாரணமாக, இவ் இறுவட்டில் இரண்டு பாடல்களை எழுதியிருக்கிறேன். அதில், 'அற்புதப் புனிதா...' என்ற பாடலில் 'எமக்கு ஆறுதலாய் நீரிருந்து அருள் தருவீர்' என்பதை 'ஆறுதலாய் நீரிருந்து எமக்கருள் தருவீர்' என வந்திருந்தால் அவ்வரி சிறப்பாக அமைந்திருக்கும். இவ்வாறான ஒரு சிறந்த இசை இறுவட்டினை உருவாக்க உழைத்த அத்தனை பேரையும் பாராட்டி, தனது மதிப்பீட்டுரையை அடிகளார் நிறைவு செய்தார்.

**நிறைவாக...**

பங்குத்தந்தை அருட்பணி R.H சகாயநாயகம் தனது தலைமை உரையில் சிறப்பு விருந்தினர்களையும் இவ் இறுவட்டில் பணிபுரிந்த அனைத்து கலைஞர்களையும் வரவேற்று நன்றி தெரிவித்தார். குருமுதல்வர் தனது உரையில் புனிதர்கள் ஊடாக இறைமக்கள் ஆழமான விசுவாசத்தையும், அருள் வளங்களையும் ஆசிகளையும் பெற்றுக்கொள்கின்றார்கள் என்றும் இவ்வாறான படைப்புக்கள் தொடர்ந்து வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். ஏற்புரையில் அருட்பணி றெனோல்ட் ஜோர்ஜ் அடிகளார் ஆயர் மற்றும் குருமுதல்வர், இவ் இறுவட்டில் பணிபுரிந்த கலைஞர்கள், பங்குத்தந்தை, ஆலய நிர்வாகத்தினர் ஆகியோருக்கு நன்றியை தெரிவித்து மதிப்பீட்டுரையில் சொல்லப்பட்ட சில கருத்துக்களை தெளிவாக்கி, காத்திரமான மதிப்பீட்டுரையை ஆற்றிய அருட்பணி. அன்புராசா அடிகளாருக்கும் நன்றியைத் தெரிவித்திருந்தார்.

## காவலன் கலசம்



# மகா ஞானொடுக்கம்

## புனித தோமையார் ஆலயம் – எழுவைதீவு ஊர்காவற்துறைப் பங்கு

## 21.11.2018 – 21.12.2018



**"நான் உங்களுக்கு புதிய இதயத்தை அருளுவேன்"**

என்ற இறைவாக்கினர் எசேக்கியேல் நூலில் இஸ்ரயேல் மக்களின் புதுவாழ்வுக்கான இறைவனின் அழைப்பை மகா ஞானொடுக்கத்தின் கருப்பொருளாகக் கொண்டு கடந்த கார்த்திகை மாதம் 21ம் திகதியிலிருந்து மார்கழி மாதம் 21ம் திகதி வரை யாழ் மறைமாவட்டத்தின் தீவக மறைக் கோட்டத்தின் ஊர்வாகற்றுறை பங்கைச் சேர்ந்த எழுவைதீவு புனித தோமையார் ஆலயத்தில் மகா ஞானொடுக்கம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

யாழ் மறை மாவட்ட ஆயரின் மேய்ப்புப்பணி மாநாட்டின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் ஒரு செயற்பாடாக ஊர்காவற்றுறை பங்குத்தந்தை அருட்பணி P.F.இராஜசிங்கம் அடிகளாரின் அயராத முயற்சியால் ஆயரின் அனுமதியோடும் குருமுதல்வரின் ஆலோசனைகளோடும் சகோதர குருக்களின் உறுதுணையோடும் பங்கு மக்களுடன் பல கருத்துரைகள், கலந்துரையாடல்களின் பின்னர் மகா ஞானொடுக்கம் ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்த மகா ஞானொடுக்கத்தை யாழ் மாகாண அமல மரித்தியாகிகள் மறையுரைஞர் குழுமத்தினர் முன்னெடுத்தனர். மறையுரைகள் குழுமத்தின் தலைவர் அருட்பணி. போல் நட்சத்திரம் அ.ம.தி. அடிகளாரின் வழிகாட்டுதலில் நான்கு நிரந்தர குழுக்களாக அருட்பணி. யேசுபாலன், அருட்பணி. செபமாலை, அருட்பணி. வரதன்குருஸ், அருட்பணி. அல்ஸ்ரன்றோஜ் ஆகியோரினால் சிறப்பாக நெறிப்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் இல்லத்தரிசிப்பு, கருத்தமர்வுகள், அன்பியங்களை உருவாக்குதல், பக்திச் சபைகளை உருவாக்குதல், அருட்சாதனங்களை வழங்குதல், அன்பியத் திருப்பலிகள், அன்பிய விருந்துபசாரம், நற்கருணைப் பவனி, அன்னையின் திருச்சுருபப் பவனி, குடும்ப பிரச்சினைகளை தீர்த்தல், ஆலயத்தில் எல்லோரையும் உள்வாங்குதல் போன்ற நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த ஆன்மீக புதுப்பித்தலின் இறுதி நிகழ்வாகிய திருவிழாத் திருப்பலியை எமது மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி P.J.ஜெபரட்ணம் அடிகளார் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். அன்றைய தினம் புனித-தோமையார் கடற்தொழிளாளர் சங்கத்தினால் நிறுவப்பட்ட புனித தோமையாரின் திருச்சொரூபம் குருமுதல்வரால் ஆசீர்வதிக்கப்பட்டு மக்களின் வணக்கத்திற்காக திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து மகா ஞானொடுக்க நினைவாக பதிக்கப்பட்ட நினைவுச் சின்னம் மறையுரைஞர் குழுமத் தலைவர் அருட்பணி போல் நட்சத்திரம் அடிகளாரால் திரைநீக்கம் செய்யப்பட்டது.


மேலும் திருநாள் திருப்பலியின் போது மகா ஞானொடுக்கத்திற்கா்க பங்கைப் பொறுப்பெடுத்த மறையுரைஞர் குழுமம், பங்குத்தந்தையிடம் உத்தியோக பூர்வமாக பங்கை மீண்டும் கையளித்தல் நிகழ்வும், ஐந்து அமலமரித் தியாகிகள் தாம் அணிந்துள்ள திருச்சிலுவையினால் சிறப்பு ஆசீரும் வழங்கினர். இறுதியாக குருமுதல்வர் ஆயர் சார்பாகவும் மறைமாவட்டம் சார்பாகவும் பங்கு மக்களுக்கு நன்றியையும், பாராட்டையும் தெரிவித்து புதுவாழ்வில் பயணிக்க வேண்டுகோள் விடுத்தார். தொடர்ந்து புனிதரின் திருச்சொரூப பவனியும் ஆசீர்வாதமும் வழங்கப்பட்டு, மாலை நடைபெற்ற கலை நிகழ்வுகளோடு மகா ஞானொடுக்கம் முற்றுப் பெற்றது.

மகாஞானொடுக்கத்தின் வெற்றிக்கு காரணமாக இருந்த எழுவைதீவு பங்கு மக்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். தனித்தீவுக்குள்ளே பல தனித்துவமான இறுக்கமான கோட்பாடுகளையும், பாரம்பரியங்களையும் கொண்டவர்கள். மறை மாவட்டத்தின் மேய்ப்புப்பணி தீர்மானங்களை நடைமுறைப்படுத்த உடனடியாக ஆண்கள் முன்னெடுத்த முயற்சிகள் யாழ் மறை மாவட்ட பங்குகளுக்கும், திரு அவைக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்பதை யாராலும் மறுக்க முடியாது. எனவே மகா ஞானொடுக்கத்தின் விளைவாக புதுவாழ்வில் பயணிக்கும் எழுவைதீவு மக்களின் ஆன்மீக, கல்வி, தொழில் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கு ஆயரின் வழிகாட்டுதலும், குருக்களின் பிரசன்னமும், தொடர் கண்காணிப்பும் அவசியமான தேவைகளில் ஒன்றாக இருக்கின்றது.

**அருட்பணி செ.இரேனியஸ்**
**உதவிப் பங்குத்தந்தை**
**ஊர்காவற்றுறை**

---

# கிறிஸ்துவின் திருமுழுக்கு – எமக்கு அடையாளம்



### முகவுரை

நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் திருமுழுக்கு என்னும் அருட்சாதனத்தைப் பெறுகின்ற போதுதான் அது உறுதிப்படுத்தப்படுகின்றது. திருச்சபை எமக்குத் தருகின்ற ஏழு அருட்சாதனங்களில் திருமுழுக்கு அருட்சாதனம் எமக்கு முதலாவதாக தரப்படுவதாகும். இவ்வருட்சாதனத்தைப் பெறாமல் ஏனைய அருட்சாதனங்களைப் பெற முடியாது என்பதாலும் இதனை புகுமுக அருட்சாதனம் என்று அழைக்கின்றோம். குழந்தை நிலையிலேயே இவ்வருட்சாதனத்தை நாம் பெறும்போது எமது சென்ம பாவம் கழுவப்படுகின்றது. மூவொரு கடவுளின் அருள் வளங்களால் நிரப்பப்படுகின்றோம். திருச்சபையின் உறுப்பினராகின்றோம். அத்துடன் இறைவனின் உரிமைப்பேறுள்ள வாரிசுகளாகும் பேற்றைப் பெறுகின்றோம். இவ்வளவு நன்மைத்தனங்களையும், அருள் வளங்களையும் தருகின்ற இவ்வருட்சாதனம் இறைவனின் மாபெரும் கொடையே அன்றி வேறில்லை எனலாம்.


### கிறிஸ்துவின் திருமுழுக்கு

இறைமகன் இயேசு பாவம் எதுவும் இல்லாதவராகவும், நித்தியரும், பரிசுத்தருமாக இருந்தாலும் தன்னுடைய முப்பதாவது அகவையில் நாம் எல்லோரும் திருமுழுக்குப் பெறவேண்டும் என்பதை வலியுறுத்த யோர்தான் நதிக்கரையில் திருமுழுக்கு யோவான் கரத்தால் திருமுழுக்குப் பெறுகின்றார் (லூக். 3:15-22) இயேசு திருமுழுக்கு பெற்றபோது தூய ஆவியானவர் புறா வடிவில் இறங்குவதையும் தந்தையின் குரலொலி கேட்பதையும் நாம் காண்கின்றோம். இயேசுவின் திருமுழுக்கு கிறிஸ்துவை இறைமகன் என்று அடையாளம் காட்டியது. வானகத் தந்தையாம் இறைவன் தன்னுடைய அன்பு மகன் மீது தூய ஆவியைப் பொழிந்து அபிசேகம் செய்கின்றார். மக்களை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்பதற்கான தன்னுடைய இறையாட்சிப் பணியை ஆரம்பிப்பதற்கு இறைமகன் இயேசு ஊட்டம் பெறுகின்றார். தந்தைக்கு ஏற்புடையவராகவும், பணிவுள்ளவராகவும் வாழக்கூடிய ஆற்றலைப் பெற்றுக் கொள்கின்றார்.

**இ.அ.அமலரட்ணம்**

### திருமுழுக்கின் பின்னான பாலைவன அனுபவம்

**"இயேசு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு யோர்தான் ஆற்றைவிட்டுத் திரும்பினார். பின்னர் அவர் அதே ஆவியால் பாலைநிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். (லூக். 4:1)** திருமுழுக்கில் நாம் பெறும் அருள் வளங்களும், தூய ஆவியின் உடனிருப்பும் பாவச் சோதனைகளை வெற்றிகொள்ள உதவுகின்றன என்பதை இயேசுவின் பாலைவன அனுபவம் எமக்கு உறுதிப்படுத்துகின்றது. நாற்பது நாட்கள் உண்ணாநோன்பிருந்த பின் இயேசு பெலவீனப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் அலகை அவரை சோதிக்கின்றான். இறைமகன் இயேசு அனைத்தையும் வெற்றி கொண்டு எமக்கு மேல்வரிச் சட்டமாக விளங்குகின்றார். பாவச் சோதனைகளை நாம் வெற்றிகொள்ள எமக்கு தன்னுடைய அனுபவத்தைத் தருகின்றார். திருமுழுக்கின் வழியாக நாம் ஒவ்வொருவரும் தூய ஆவியின் ஆலயங்களாக மாறுகின்றோம். கிறிஸ்து திருமுழுக்கின் ஊடாக இறையாட்சிப் பணிக்காக தயாரானது போல நாமும் திருமுழுக்கின் ஊடாக பொதுக் குருத்துவ இறையாட்சிப் பணிக்கு தயார்படுத்தப் படுகின்றோம்.



### திருமுழுக்கு ஒரு இறை அனுபவம்

திருமுழுக்கின் வழியாக நாம் ஒவ்வொருவரும் இறைவனின் அன்புப் பிள்ளைகளாக புதுப்பிறப்பு அடைகின்றோம். **"நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தம் மகனின் ஆவியை உங்களுக்குள் அனுப்பியுள்ளார். அந்த ஆவி அப்பா தந்தையே எனக் கூப்பிடுகின்றது. இதனால் நீங்கள் கடவுளின் பிள்ளைகளாகவும் உரிமைப்பேறு உடையவர்களாகவும் இருக்கின்றீர்கள்."** (கலா.4:6-7) எனும் புனித பவுல் அடிகளின் கூற்று உறுதிப்படுத்துகின்றது. நாம் கடவுளின் பிள்ளைகளாக இருப்பதனால் அலகையின் உறவையும் அவனின் தீய செயல்களையும் விட்டு விலகி, இறைவனுக்குரியவர்களாக வாழ வேண்டும். அருட்கொடைகளைப் பயன்படுத்தி கடவுள் நமக்கென்று வகுத்திருக்கும் திட்டத்தை உய்த்துணர வேண்டும். திருமுழுக்கின் ஊடாக நாம் பெற்றுக்கொண்ட அழியாத முத்திரையை பேணிப் பாதுகாக்க வேண்டும்.

### நிறைவாக

எமது உள்ளம் சாத்தானின் உறைவிடமாக இருந்தால், பாவ இருள் மண்டிக்கிடந்தால் தூய ஆவியானவருக்கு அங்கே இடமில்லை. நாம் பெற்றுக்கொண்ட திருமுழுக்கு அருள் பாவச் சோதனைகளை விரட்டுகின்றது. இதற்கு எமது ஆழமான இறை விசுவாசம் எமக்கு கைகொடுக்கின்றது. எனவே இறைமகன் இயேசு வின் திருமுழுக்கு அனுபவத்தை நாளாந்தம் நாம் நினைவு கூர்ந்து தூய ஆவியின் ஆலயமாக வாழ முயற்சி எடுப்போம். திருமுழுக்கிலே கொடுத்த வாக்குறுதிகளை ஒவ்வொரு நாளும் புதுப்பிப்போம். இறைவனின் அன்புப் பிள்ளைகளாக வாழ இறையருள் வேண்டுவோம்.

# காவலன் கலசம்



## விவசாயக் கண்ணீர்....

கடந்த இரவை கடந்து வெற்றி கொண்டோம்
விடிந்த கதிரை விழுந்து வணங்கி நின்றோம்

மறைந்த மக்கள் கரைந்து மண்ணாய் போயினர்
முளைத்த விதையின் உயிர்க்கு உரமாய் ஆகினர்

எழுந்த மனிதம் உணவு காண வித்திட்டோம்
இருந்த நிலத்தை உணவுக்காய் வித்திட்டோம்

இயற்கையாவது நம் துயர் அறிந்திருந்தால்
மும்மாரி முப்போகம் விளைந்திருக்கும்

இயற்கையுடன் இணைந்த வாழ்வே வாழ்வென்று
இதயமில்லா இம் மக்கள் அறுவுதான் அறிவதென்று

உணவும் தானியமும் தந்த சூரியனுக்கு
உவகையுடனும் கண்ணீருடனும் பொங்கல் படைத்தோம்.

விவசாயத்தின் கடவுளை
பொங்கல் பொங்கி வீழ்ந்து வணங்கி
நன்றி கடனாக வருடா வருடம் பொங்கி மகிழ்ந்தோம்

ஊரோடும் உறவோடும் இது சுவை பொங்கலை
பகிர்ந்து உறவுகளை புதுப்பித்தோம்
பண்பாட்டை மாற்றாமல் புதுப்பானையில் பொங்கினோம்

விண்ணைப் பிளந்து விண்வெளி கேட்டிட
பட்டாசுகள் கொளுத்தி புத்தாடை அணிந்து
உவகையுடன் பொங்கினோம்
நம் வாழ்க்கைக்காய் கண்ணீருடன்....

அ. றொக்சன்
புனித பத்திரிசியார் கல்லூரி

## திக் கெட்டும் ஒலிக்கட்டும் ஆகட்டும்

யானைக்கும் பலம் தும்பிக்கையிலே.
சேனைக்கு பலம் நம்பிக்கையிலே.
ஆன்னைக்கு பலம் "ஆகட்டும்" மென்கையிலே.
ஆகட்டும் என்ற வார்த்தை ஆற்றல் படைத்தது மனித குணத்தை மீட்கும் வலிமை கொண்டது. ஆகட்டும் என்ற பதிலை எதிர்பார்த்து விண்ணவரும், மண்ணவரும் மரியாளை நோக்கிக் காத்திருந்தனர். மரியாள் உமது சொற்படி எனக்கு ஆகட்டும். (லூக். 1:38) மரியாள் விசுவசித்தார் கீழ்ப்படிந்தார் மீட்பை ஈட்டினார் ஆகட்டும். என்ற மரியாவின் பதில் முழுமையானது இறுதியானது நிபந்தனையற்றது.

மரியன்னை பற்றி ஒரு புத்தகம் எழுத வேண்டும் என்று ஒருவன் தீர்மானித்தான் ஆனால் அந்தப் புத்தகத்தில் ஒரே ஒரு பக்கம் தானிருக்க வேண்டும் சிந்தித்தான் பல நாட்கள் பல வருடங்கள் சிந்தித்தான் இறுதியில் அப்புத்தகத்தை எழுதிமுடித்தான் அவன் ஒரே ஒரு பக்கத்தில் ஒரே ஒரு வார்த்தை எது மரியாளின் வாழ்வில் சாராம்சம் எது அதுதான் ஆகட்டும் என்ற வார்த்தை ஆகட்டும் என்றதால் தான் இறைவன் உலகில் மனுவுருவெடுத்தார். நிறை மாத கர்ப்பிணியாக இருக்கும் போது பெத்தலேகமில் வீடு வீடாக கதவை தட்டிய போது முகத்தில் அடித்தாற்போல் கதவு அடைக்கப்பட்டது. மரியாள் ஆகட்டும் என்றார். 40ம் நாள் ஆலயத்திற்கு குழந்தை யேசுவை தூக்கிச் சென்றான். அங்கேயும் சிமியோன் கூறுகிறார். உம் உள்ளத்தை ஒருவாள் ஊடுருவும் என்றார் அதற்கும் மரியாள் ஆகட்டும் என்றாள். பாலன் இயேசுவை தூக்கிக் கொண்டு இரவோடு இரவாக எகிப்திற்கு ஓடும் போது அகதியாக வாழும்போது திரும்பி நசரேத் வரும்போது மரியாள் ஆகட்டும் என்றாள். 12 வயதில் .யேசு காணாமல் போன நேரத்தில் அவரை தேடி அலையும் போதும் மரியாள் ஆகட்டும் என்றார். 30 வயதில் மகனைப் பிரியும் போதும் மரியாள் ஆகட்டும் என்றார். 33 வயதில் தன் ஒரே ஒரு தெய்வமகன் சிலுவையில் மூன்று ஆணிகளில் தோங்கும் போதும் ஆகட்டும் என்றார்.
புனிதத்தின் இரகசியம் ஆகட்டும்.

**மரியதாஸ் விக்ரோறியா**
**யாழ்ப்பாணம்**

இயேசுவின் இறப்பு வரை சிலுவை என்பது துன்புறுத்தல், அவமானம் மற்றும் மரணத்தின் சின்னமாக விளங்கியது. இயேசுவின் இறப்பின்பின் சிலுவை நிலைவாழ்வின் சின்னமாகியது. அருள்தரும் பேரின்பத்தின்சின்னமாகியது. ஒளியின் சின்னமாகியது. நல்லிணக்கத்தின் சின்னமாகியது. இவ்வுலகில் காணப்படும் பலவிதமான பல் கலாசாரங்களுக்கு உட்பட்ட சிலுவைகளைப்பற்றியமறைஅறிவையும், ஆன்மீக அறிவையும், அனுபவத்தையும்மையமாகக் கொண்டு பல்வேறு வகையான சிலுவைளின் வடிங்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் காட்சிப்படுத்தியது மட்டுமன்றி, சிலுவைளின் சரித்திரம் என்னும் நூலிலும் பதிவு செய்துள்ளேன்.
**அருட்பணி சிசில் ஜோய் பெரேரா, அதிபர்.**
**"தஹம் செவன" இடைநிலைக் குருமடம், களுத்துறை.**

"எனது சீடராக வரவிரும்பும் எவரும் தன் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" - இயேசுக்கிறிஸ்து



16

### பிதாப்பிதாக்களின் சிலுவை

இந்தச் சிலுவை Crus Gestatoria இரட்டைத் துண்டுச் சிலுவை மெற்றோ பொலிற்றன் சிலுவை, பேராயர் சிலுவை எனவும் அழைக்கப்படும். இது பிதாப்பிதாக்களாலும் பேராயர்களாலும் பயன்படுத்தப்பட்டது. இப்பொழுது கத்தோலிக்க பாரம்பரியத்தில் நடைமுறையில் இல்லாவிட்டாலும் அதற்குப் பதிலாகத்தான் ஆயர்களின் கோல் பயன் படுத்தப்படுகிறது. கிடைக்குத்தாக உள்ள துண்டுக்கு பல அர்த்தங்கள் கொடுக்கப்படுகின்றன. பல வேளைகளில் இதன் மேல் பகுதியை இயேசுவின் சிலுவையில் தொங்கும் INRI பொறிக்கப்பட்ட பதாகையாக குறிப்பிடுகின்றனர். இரண்டாவது விளக்கம் சொல்கிறது மேலுள்ள சிறிய பகுதி மரணத்தையும், நீளமான பகுதி உயிர்ப்பையும் கூறுகிறது. இன்னும் அதிகமாக இவ்விரண்டு பகுதிகளும் உலக மற்றும் ஆன்மீக சக்திகளைக் கூறுகிறது.

### பாப்பரசர் சிலுவை

மூன்று கிடைத்துண்டுகளைக் கொண்ட சிலுவை பாப்பரசர் சிலுவையைக் குறிக்கின்றது. இச்சிலுவைக்கு பல அர்த்தங்கள் உண்டு.
1. தூய திரித்துவம்
2. இறையியல் சார்ந்த புண்ணியங்கள்
3. திருத்தந்தை உரோமையின் ஆயராகவும், மேற்கத்தேய பிதாப்பிதாவாகவும் பேதுருவானவரின் வழிவந்தவர் என்பதையும் குறிக்கின்றது.



### கீழைத்தேய சிலுவை

இச் சிலுவை கீழைத்தேய திருச்சபையினால் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. மேலும் இச் சிலுவையை ஆலயத்தின் மேற்பகுதியான "டோம்" என அழைக்கப்படும் பகுதியில் வைப்பார்களாயின் அது கீழைத்தேய திருச்சபையை அடையாளப்படுத்துவதாக அமையம். இச் சிலுவையானது இரு இடைமட்டான தளத்தையும் மற்றும் மூன்றாவது இடைமட்டமான தளம் சற்று சரிவாக சிலுவையின் கீழ்ப்பகுதியில் காணப்படுகின்றது. இச் சிலுவையில் குறிப்பிட்டுள்ளபடி முதலாவதாக காணப்படும் சிறிய தளமானது இயேசுவை சிலுவையில் அறைந்த போது அவரது தலைக்கு மேலே பொருத்தப்பட்ட உலோகத்துண்டால் பொறிக்கப்பட்ட பட்டதயத்தைக் குறித்து நிற்கின்றது. கீழ் பாகமானது இயேசுவின் கால் வைக்கப்பட்ட இடத்தையம் குறிக்கிறது. கீழைத்தேய மரபின் படி இயேசுவின் பாதங்கள் ஒன்றின் மீது ஒன்று அல்லாமல் அருகருகே வைத்து அறையப்பட்டதாக கூறப்படுகிறது.

சிலுவையில் காணப்படுகின்ற சரிவான தளத்திற்கு ஏராளமான விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. விசேடமாக ரஷ்யர்களின் பாரம்பரியத்தில் அதிகமாக விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளது. இயேசுவின் இறப்பின் பின்னர் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அடிப்பாகம் சரிந்து காணப்படுகின்றது எனவும் கூறுகின்றனர்.

## இளையோர் காவியம்... 17

மாற்றம்
மனங்களில் அல்ல
ஆடைகளில் மட்டும் தான்
எம்மை
வழமைபோல
உன் பிறந்த நாளில்

மனிதம்
அடுத்தவன் எக்கேடு கெட்டாலும்
எங்களுக்கென்ன கவலை
வெள்ளைவேட்டிக் கள்ளர்போல
காணிக்கைப் பவனியில்

சுயநலம்
பிஞ்சுபோய் கிடக்கிறது ஆடை
வேசம் போடு

அக்கறை
யாரும் இழந்த வாழ்க்கைக்கு
உதவி செய்ய வந்தால்
ஆப்பு

வீதிக்கு வெளிச்சம் வேணும்
வாழ்க்கையில் இல்லை ஒளி

இருபால் நடக்குது சீர்கேடுகள்
என்ன சத்தம் என்றால்
திருடன்

போலி அன்பு தொலைபேசியில்
வலை வீசி விழுந்தார் பலர்

அன்பை விசாரிக்க வந்தபோது
முகமூடி இருந்தது
காணவில்லை முகத்தை

சொந்த கனவுவோடு தொடர்பில்லை
கருவறையில் குழந்தை

தப்பு வந்ததும் மறைப்பதற்கு
கணவரோடு தற்காலிக இணைப்பு

கோவிலில் சொன்னார்கள்
அத்தனையும்
விட்டுவிடுகிறோம் என்று
தோளில் இருந்து
இறக்கி விட்டிருக்கிறதே தவிர
துரத்தி விடவில்லை பசாசை

பல உறவுகளை இழந்தும்
கல் நெஞ்சுகள் ஆசைப்படுவது
வீட்டுத்திட்டத்தை
இழக்க....

சினிமா பார்த்து
அழுது கொண்டிருக்கின்றோம்
அயலான் துன்பத்தில்
சிரித்துக் கொண்டிருக்கிறோம்
(தொடரும்...)

உயிரோவியன்

### சிந்திக்க ஓர் சித்திரம்



## காவலன் கலசம்

# “இறை ஊக்கத்தினாலேயே நான் பாடல்களை உருவாக்கினேன்...”

## கலைஞர் ஏ.ஆர்,விஜயகுமார் அவர்களுடனான நேர்காணல்

தாளையடியைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்டு கடந்த 35 வருடாங்களுக்கு மேலாக கலைப்பணியாற்றி வருபவர் அல்பிரட் றொபேட் விஜய குமார் அவர்கள். கத்தோலிக்க ஆசிரியராகிய இவர் நாடகத்துறையிலும் இசைத்துறையிலும் சமகாலத்தில் தீவிரமாக ஈடுபட்டுவருபவர். நாடகம், நாட்டுக் கூத்து, இசைநாடகம், திருப்பாடுகளின் காட்சி என பல நாடகங்களிலும் சிறந்த நடிகனாகவும், நெறியாளனாகவும், மெல்லிசைப் பாடகனாகவும் திகழ்வதுடன் 150 க்கும் மேற்பட்ட பாடல்களுக்கு இசை அமைத்தும் பல இசை இறுவெட்டுக்களை வெளியீடு செய்துள்ளவர். சிறந்த கீபோட் கலைஞன். கிறிஸ்தவ இசை மரபில் நிராகரிக்கு முடியாத ஆளுமையாக விளங்கும் இவரது கலைப்பணியை மதித்து கிறிஸ்தவ கலாசார அமைச்சு அண்மையில் 'தர்மபிரபாஸ்வர' விருதினை வழங்கி கௌரவித்துள்ளது. அவருடைய அனு பவங்களை பகிர்ந்து கொள்ளும் முகமாக இன்றைய கலைக்காவலனில் இந்நேர்காணல் இணைக்கப்பட்டுள்ளது.

**கேள்வி :- தங்களது கலைத்துறைப் பிரவேசம் பற்றிக்கூறுங்கள்**

எனது சொந்த இடம் தாளையடி அது ஒரு கலைக்கிராமம். எனது தந்தையார் கூத்துக்கலைஞனாக இருந்தார். அமரர் பூந்தான் யோசேப்பு போன்ற அண்ணாவிமார்களுடன் இணைந்து நடித்தவர். ஒரு அண்ணாவிக்குரிய ஆற்றலைக் கொண்டிருந்தார் அவரது ஆர்வமும் ஊக்கமும் அவரைப்பார்த்து வளர்ந்த அனுபவமும் சிறிய வயதிலேயே எங்கள் வீட்டில் நானுட்பட சகோதரர்களாகிய நாம் எல்லோரும் பாடக்கூடியவர்களாக இருந்தோம். அதுதான் கலைசார்ந்த ஆர்வம் எனக்கு வருவதற்குக் காரணம். தொடர்ந்து நான் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியில் விடுதியில் தங்கி இருந்து படிக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். அங்கே நாடகக் கலைக்கு அதிக ஊக்கம் இருந்தது.அவ்வாறே இசைத்துறையிலும் நான் வளர்வதற்கு அங்கு களம் கிடைத்தது. அருட்திரு மகேந்திரன் அருட்திரு அன்ரன் இராஜநாயகம் அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் போன்ற தந்தையர்கள்




எனக்கு ஊக்கமாக இருந்தார்கள் பின்னர் திருமறைக்கலாமன்றத்தில் இணைந்து கொண்டேன். அருட்திரு மரியசேவியர் அடிகளின் ஆளுமை என்னை முழுமைப் படுத்தியது

**உங்களது நாடத்துறைக்கான ஆளுமை வளர்ச்சி எவ்வாறு ஏற்பட்டதென்று கூறுவீர்களா ?**

ஏற்கனவே கூறியது போல சிறிய வயதிலேயே எனது தாளையடி கிரமத்தில் எனக்கான ஊக்கங்கள் கிடைத்தன. நகைச் சுவை நாடகங்கள் நடித்துக்கொண்டிருந்தேன். பின்னர் புனித ஹென்றி அரசர் கல்லூரியில் படித்தபோது ஆனந்தராஜா ஆசிரியரும் விக்ரர் ஆசிரியரும் மக்பெத் நாடகத்திற்கு நடிகர் தெரிவொன்றினை மேற்கொண்டனர் எனது வகுப்பிலும் தெரிவு செய்தனர் ஆனால் என்னை தெரிவுசெய்யவில்லை நான் கவலையுடன் அவர்கள் வருகின்ற இடத்தில் என்னை காணும்படி நின்றேன். உடனே அவர் உனக்கு நாடகம் நடிக்க விருப்பமா என்று கேட்டு வா என்று அழைத்தார்.

சேக்ஷ்பியரின மக்பெத் நாடகத்தில் என்னை சாதாரண ஒரு பாத்திரத்திற்குத் தான் எடுத்தார்கள் பின்னர் எனது நடிப்புத் திறனைக் கண்டு வேறு வேறு பாத்திரங்கள் தந்து இறுதியில் கதாநாயகனாகவே ஆக்கினார்கள்.அந்நாடகம் தேசிய நிலையில் முதல் இடம்பெற்றது. அது என்னை




நடிகனாக பாடசாலையில் அறிமுகப்படுத்தியது. தொடர்ந்து யூலிய சீசர், ஒத்தெல்லோ ஹம்லற் என பல நாடகங்களை நான் எனது கல்லூரிக்காலத்தில் நடித்தேன். எனது சிறிய தந்தையார் முறையான பிரபல நாடகக்கலைஞர் தாசீசியஸ் புதிதொரு வீடு நாடகத்தினை பாடசாலையில் பழக்கினார். அதன் தயாரிப்பு அனுபவம் நவீன நாடகம் தொடர்பான எனது அறிவை அகலப்படுத்தியது. அதன் காரணமாக நாடக அரங்கக்கல்லூரியில் பயிற்சிபெற்று நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. பேராசிரியர் சி. மௌன குரு அவர்களின் சங்காரம் என்ற கூத்து வடிவ நாடகத்திலும் சாதி அரக்கனாக நடித்தேன் வடமோடி ஆட்டங்களை கற்கக்கூடியதாக இருந்தது. தொடர்ந்து இருட்டினில் குருட்டாட்டம் போன்ற நாடகங்களிலும் நடித்தேன். தொடர்ந்து ஆசிரியராகப்பணியாற்றிய காரணத்தினால் மாணவர்களுக்கு நாடகங்களை பயிற்றுவிக்கவேண்டிய தேவை வந்தபோது நெறியாக்கப்பணிகளையும் ஆற்றினேன். குறிப்பாக காலஞ்சென்ற பொன் கணேச மூர்த்தி அவர்களின் சமூக நாடகங்கள் சிலவற்றை நெறிப்படுத்தும் பணியினை பொறுப்பேற்றேன் ஆனால் எனது நாடகஆளுமைக்கு ஒரு முழுமையைத் தந்தது திருமறைக் கலாமன்றமாகும்.

**திருமறைக்கலாமன்றத்துடனான உங்கள் உறவு பற்றி ..?**

எண்பதுகளில் இளவாலையில் போயிட்டியில் ஒரு திருப்பாடுகளின் காட்சியை நெறிப்படுதினேன். அதனை பார்வையிட வந்த திருமறைக் கலாமன்ற இயக்குநர் மரியசேவியர் அடிகள் எனது திறமையை இனங்கண்டு திருமறைக்



கலாமன்றத்திற்கு என்னை அழைத்தார் மகிழ்வோடு சென்று திருப்பாடுகளின் காட்சியில் கைப்பாஸ் பாத்திரத்தினை ஏற்று நடித்தேன். அது எனக்கு மிகுந்த வரவேற்பினைப் பெற்றுத்தந்தது. தொடர்ந்து அவர்களின் நாடகங்கள், கூத்துக்கள் இசைநாடகங்கள், நவீன நாடகங்கள் எனப்பலவகை நாடகங்களிலும் நடிக்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது. பல நாடக அறிவையும் ஆற்றல்களையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. என்னை யாழ்ப்பாண உலகிற்கு வெளிப் படுத்தக் கூடியதாகவும் இருந்தது. அது



பெரிய சந்தர்ப்பங்களைத் தந்து பூரணத் துவமாக என்னை வளர்த்தது. அதுமட்டு மன்றி திருமறைக்கலாமன்றம் என்னை 1997, 1998 காலப்பகுதியில் பல வெளி நாடுகளுக்கும் அழைத்துச்சென்று எனது திறமைகளை உலகம் முழுவதும் பரப்பு வதற்குச் சந்தர்ப்பம் தந்தது. அதனால் தான் இளவாலையில் திருமறைக்கலா

காவலூர் யோவான்

மன்றத்திற்கு ஓர் கிளையை உருவாக்கி நான் பெற்ற அனுபவத்தினை பலரும் பெற வழி செய்தேன்.

அதுமட்டுமன்றி 2006 ஆம் ஆண்டு பலிக்களம் என்ற பாடுகளின் நாடகத்தினை நானே நெறிப்படுத்துக் கின்ற சந்தர்ப்பத்தையும் திருமறைக்கலா மன்றம் எனக்கு தந்தது. தொடர்ந்து இரண்டு வருடாங்கள் இளவாலையிலும் கடந்த வருடம் உடுவில் மகளிர்'. கல்லூரி மாணவிகளுக்கும் பயிற்றுவித்தேன். தனியே பெண்கள் மட்டும் நடிக்கின்ற பாடுகளின் நாடகமாக அது இருந்தது. பாடசாலை சமூகத்தினால் அதற்குப் பெரும் வரவேற்புக்கிடைத்தது.

**இசைத்துறையில் எவ்வாறு நுழைந்தீர்கள்...?**

இசை ஆர்வம் என்பது கோவில் பாடல்களுக்கூடாக எனக்குள் வந்தது. நான் ஆலய பாடகர் குழாம்களில் பாடினேன். மற்றும் சினிப்பாப்பாடல்கள் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி போன்றவற்றிலெல்லாம் பாடினேன். நல்ல குரல் வளத்தினை இறைவன் எனக்குத் தந்துள்ளார். அது தவிர எமது ஹென்றி அரசர் கல்லூரியின் விடுதியில் ஒரு சிறிய ஆர்மோனியம் இருந்தது. அதனை எடுத்து நான் எனதுபாட்டில் வாசிப்பதற்கு முயற்சித் தேன். அப்போது எனது நண்பர் ஜெயரஞ்சன் என்பவர் ஓரளவு ஆர்மோனியம் வாசிக்கக்கூடியராக இருந்தார் அவர் ஆலய பாடல்கள் சிலவற்றை போடக்கூடியவராகவும் இருந்தார். அவரைப்பார்த்து நானும் ஆலயப்பாடல்களை வாசிப்பதற்கு குரு இல்லாமலே கற்றுக்கொண்டேன். முதலாவதாக அன்பின் தேவநற்கருணையிலே என்ற பாடலைதான் எனக்குள்ளே உள்வாங்கிப் பழகினேன். பின்னர் தினமும் பாடல்களை நானாக பழகினேன். மறுநாள் ஜெயரஞ்சனுக்கு போட்டுக்காட்டுவேன் அவர் தான் கற்றதனை எனக்கு போட்டுக்காட்டுவார் போட்டியாக பழகத் தொடங்கினேன். கேள்வி ஞானத்தோடு கீபோட் வாசிக்கின்ற ஆற்றல் எனக்கு அவ்வாறுதான் வந்தது. அப்போது சிறியதொரு கீபோட்டினை வாங்கித்தந்தார்கள்.அதில் பாடல்களை வாசித்தேன். அப்போது அருட்தந்தை மகேந்திரன் அவர்கள் இளவாலைப் பங்குத் தந்தையாக இருந்தார் அவர்தான் நீ கோவிலில் பாடல்களை பழக்கிப்பாரன். என்ற போது தான் முதன்முதலாக 1986 ஆம் ஆண்டு இளவாலை றீற்றம்மா கோவிலில் பாடகர் குழாமுக்கு பாடல்களைப் பயிற்றுவித்து கீபோட்டையும் வாசித்தேன். அந்த அனுபவம் மறக்க முடியாதது இரவிரவாக எல்லாப் பாடல்களையும் நான் கீபோட்டில் பயின்று மறுநாள் பூசையில் அதனை பிரயோகிப்பேன். சிறிய கீபோட்டை எனது காலில் வைத்து வாசித்தேன் அதனை ஆச்சரியமாக பலரும் பார்த்தனர். தொடர்ந்து யூதாததேயு கோவிலில் பாடலை பயிற்றுவித்து கீபோட் வாசித்தேன் அன்றில் இருந்து இன்று வரை தொடர்ந்து இரண்டு கோவில்களிலும் நானே பயிற்றுவித்துவருகின்றேன்.பல ஆலயங்கள் இன்றும் எனனை நம்பி அழைக்கின்றன.

**எப்போது இசை அமைக்க கற்றுக் கொண்டீர்கள்.?**

ஒருதடவை கீபோட் வைத்திருந்த போது அருட்தந்தை கிருபாகரன் அடிகள் என்னைப்பார்த்து என்ன கொம்போசிங் செய்கிறீரா என்று கேட்டார் அது எனக்கு ஒரு உந்துதலாக இருந்தது நானே பாடல்களை கொம்போசிங்செய்தால் என்ன என்ற எண்ணத்துடன் செயற்படத்தொடங்கினேன்.. இறைவனின் அருள் என்னை வழி நடத்தியது.பாடல்களுக்கு இசை அமைப்பதும் பாடல்களை எழுதுவதும் என பணி தொடர்ந்தது.

நான் இசையை முறையாக கற்றது கிடையாது இராகம் தாளம் என இசை நுட்பங்களை அறிந்தவன் அல்ல எனவே புதிதாக இசை அமைக்கத் தொடங்கும் போது இறைவனைத்தான உருக்கமாக வேண்டுவேன். தெளிவைத்தாரும் ஆண்டவரே என்று வேண்டுவேன் அதற்குப்பின்னர்தான் பாடல்களை கொம்போஸ் செய்வேன். ஆச்சரியமாக அது என்னில் உருவா-கும். இறை ஊக்கம் தான் என்னை வழிப்படுத்துகின்றது என்பதில் நான் அசையாத நம்பிக்கை உள்ளவன். முதல் முதல் பனிப்பூக்கள் என்ற ஒலி நாடாவை வெளியிட்டேன் கடவுளுக்கு புகழ்பாடுவதில் வெற்றி பெற்றேன் என்ற உணர்வு வந்தது. பாடலை எப்படி போடுவது எப்படி உருவாக்குவது என்பதை நான் யாரிடமும் கற்கவில்லை. ஆனால் நான் எழுதி இசை அமைத்த பாடல்களை சங்கீத வித்துவான் கணபதிப்பிள்ளை சங்கீத பூஷணம் சோமசுந்தரம் போன்றவர்கள் பாராட்டியபோதுதான் உணர்ந்தேன். ஒருதடவை இறைவணக்கப்பாடல் ஒன்றினை இயற்றிப் பாடியபோது சோமசுந்தரம் அவர்கள் ஆச்சரியமாக கூறினார் 'இறைவணக்கப்பாடல் ஹம்சத்வனி இராகத்தில் அமைக்கப்பட வேண்டும் இந்தப்பாடல் சுத்தமான ஹம்சத்வனி இராகம்' என்று பாரட்டினார்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# என் கேள்விக்கென்ன பதில்!




அருட்பணி. செ. அன்புராசா அமதி

(S.ஜீவமலர், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

**கேள்வி: ஆலயம் சென்று பல பணிகள் செய்யும் பலரின் வாழ்வில் நேர்மை இல்லை. இதற்கான காரணம் என்ன? கூறுவீர்களா?**

**பதில்:** ஜீவமலர், கோயில்பூனைதேவனை மதியாது என்ற நம் முன்னோரின் முதுமொழியைக் கேட்டிருக்கிறீர்களா? இவ் அவதானிப்பு பல நேரங்களில் சரியாகி விடுகிறது. ஆனால், இவ்விடயத்தில் தேவனும் (இறைவனின் பிரதிநிதியாக இருப்பவர்களும்), அதேவேளை, பூனையும் (நீங்கள் நேர்மையில்லை எனக் கருதுபவர்களும்) கவனமாக இருத்தல் வேண்டும். ஏனெனில் தேவன் (இறைவனின் பிரதிநிதிகள்) பூனைகளைச்(ஆலயப் பணிகளில் ஈடுபடுகிறவர்கள்) சரியாகக் வழிநடத்தாது விட்டால் பூனைகள் புலிகளின் நினைப்பில் வாழத் தொடங்கிவிடக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு! அதேநேரம், ஆலயப் பணிகளுக்கும் வரமாட்டார்கள், வருகிறவர்களுக்கும் ஏதாவது சொல்லிக்கொண்டு இருப்பவர்களும் நம் மத்தியில் கணிசமானோர் உண்டு என்பதையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். காய்க்கிற மரத்திற்குத்தான் கல்லெறிகிறார்கள் என்பதையும் இங்கு கவனிக்கவேண்டும்!

*(நாதன், கிளிநொச்சி)*

**கே : நமது ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கிறிஸ்து பிறப்பு செய்தியில் கோடிட்டுக்காட்டிய அரசியல் குறிப்பினைப் படித்தீர்களா? அதுபற்றி என்ன கருதுகுறீர்கள்?**

**ப:** நாதன், யாழ்.ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கிறிஸ்துபிறப்பு வாழ்த்துச் செய்தியில் கோடிட்டுக்காட்டும் விடயத்தினை தமிழ் அரசியல்வாதிகள் கவனத்துடன் நோக்கவேண்டி இருக்கிறது. அச்செய்திக் குறிப்பில், " தயவுசெய்து தமிழ் மக்களையும் அவர்களின் அடிப்படை உரிமைகளையும் பணயம் வைத்து அரசியல் நடத்தாதீர்கள். தமிழ் மக்கள் நலனுக்காக உங்கள் அரசியல் லாபங்கள் அனைத்தையும் தியாகம் செய்யுங்கள். இப்போது அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்டு எட்டப்படாத எந்த முடிவும் வருங்காலத்தில் எட்டப்படும் என்ற எந்த உத்தரவாதமும் இல்லை. தமிழ் மக்களுக்கு எதிராக அல்லது சாதகமற்ற உங்கள் எந்த நிலைப்பாட்டையும் இனியும் தமிழ் மக்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என உறுதியாகச் சொல்லிவைக்க விரும்புகிறோம்.." எனக் குறிப்பிட்டிருக்கிறார். மிகவும் முக்கியமான ஒரு விடயத்தினை ஆயர் அவர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளார் என்றே கருதுகிறேன். புதிய அரசியலமைப்புத் தயாரிப்பில் தமிழர்கள் தரப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் நேரடியாக ஈடுபடுவதால் அவர்கள் ஆயரின் கருத்தினை அவதானத்துடன் கருத்தில் கொண்டு செயற்படவேண்டி இருக்கிறது.

*(லதா, உடையார்கட்டு, முல்லைத்தீவு)*

**கே: வன்னியில் ஏற்பட்ட வெள்ளப் பேரழிவைப் பார்த்தீர்களா? வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்காக தெற்கிலிருந்து மனிதாபிமான புகையிரதம் வந்ததே அதுபற்றி?**

**ப:** வெள்ளத்தை நேரடியாகப் பார்த்தேன். இப்படி வெள்ளத்தினை இதுவரையில் நேரடியாகப் பார்த்ததில்லை! நெல் வயல்கள் சமுத்திரமாகக் காட்சியளித்தது. 'காப்பெற்' வீதிகளுக்கு மேலாக வெள்ளம் கரைபுரண்டோடியது. அடுத்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு தெற்கிலிருந்து மனிதாபிமான புகையிரதம் வந்தது பாராட்டுக்குரியது. நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், போரினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அக்காலங்களில் அவசர மருத்துவ, உணவுப் பொருள்களை அனுப்பியிருந்தால் தெற்கை வடக்கு தலைவணங்கியிருக்கும்! நன்றாக இருக்கும்போது நலம் விசாரிப்பதில் பெரிய பலன் ஒன்றும் இல்லை என்றே கருதுகிறேன். துன்புறுகிற போதுதான் துணையாயிருக்க வேண்டும். சரிதானே லதா?

*(சுதர்சன், யாழ்ப்பாணம்)*

**கே: 'தமிழ்மக்களும் இலங்கையர்கள் என்று உணர்ந்து, வடக்குக் கிழக்கு மாகாண தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்கப்படவேண்டும்' என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சொல்லியிருப்பதாக சில கிழமைகளுக்கு முன் நாளிதழ் ஒன்றில் படித்தேன். தமிழர்களில் அரசியல் தீர்வு சம்மந்தமான அவரில் ஏற்பட்டிருக்கிற மாற்றமாக இதனைக் கொள்ளலாமா?**

**ப :** சுதர்சன், கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் இனப்பிரச்சினை தொடர்பாக பல வகைப்பட்ட பல தரத்தினையுடைய கருத்துக்களை முன்னைய காலங்களில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்திருக்கிறார். இலங்கையின் அரசியல் நிலை மிக மோசமான ஒரு கட்டத்தை கடந்தாண்டு ஐப்பசி மாதம் 26 இன் பின் அடைந்தபோது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பேராயர் அவர்களைச் சந்தித்த வேளையில் மேற்சொன்னவாறு கூறியிருக்கிறார். இக்கருத்து நிலையிலிருந்து அவர் மாறாதவரை இதனை மாற்றமாகக் கொள்ளலாம்! ஆனால், இதற்கான 'வொறன்ரி'யை என்னால் தர முடியாது!

*(றொசென்சா, பருத்தித்துறை)*

**கே: இப்போது, யாழ்ப்பாணத்தில், வெளிநாட்டு மாப்பிள்ளையளுக்குத்தான் பெண்களைக் கட்டி வைக்கிறார்கள்! காரணம் சொல்வீர்களா?**

**ப :** புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்ற நமது முதலாவது தலைமுறையினர் தமது துணைவியாக, துணைவனாக இங்குள்ளவர்களை அழைத்துத் திருமணம் செய்தார்கள். அது ஒருபுறமிருக்க, இளம்பெண்கள் வெளிநாடு போவதில் குறியாக இருந்தால் வெளிநாட்டு மாப்பிள்ளைகளைத்தான் திருமணம் செய்து வைக்கவேண்டி - செய்யவேண்டி இருக்கிறது. நிற்க, வெளிநாட்டில் இருந்து வருகிற மாப்பிள்ளைமார் கொஞ்சம் கலர்கலராக இருப்பதும், அவர்களின் கையில் காசு புளங்குவதும் வெளிநாட்டு மாப்பிள்ளைகளைப் பார்த்துக் கட்டிக்கொடுப்பதற்கான ஒரு முக்கிய காரணம் எனலாம்.

உண்மையில், அக்கரை தெரியாமல் இருப்பவர்கள்தான் இக்கரையில் இருந்து கொண்டு அக்கரையின் மாயப்பசுமைகளுக்காக ஆசைப்படுகிறார்கள். அங்கு, போய்ப் பார்த்தபின் மிச்சமெல்லாம் புரியும் றொசென்சா!

*(சுமன்: அரியாலை)*

**கே : குடிப்பழக்கம், இன்றைய இளம் வயதினரிடையே அதிகரித்து வருகிறதே! இதன் தார்ப்பரியம் விளங்காமல் பல இளைஞர்கள் இப்பழக்கத்திற்கு அடிமையாகின்றார்களே!?**

**ப :** சுமன், இவ்விடயம் குறித்து, ஒரு சாராயப் போத்தல் சொன்ன சமாசாரத்தை இளைஞர்கள், இளம் வயதினர் நன்கு புரிந்துகொள்ள வேண்டும் அல்லது புரிந்து கொள்ளும்படி அவர்களுக்குச் சொல்ல வேண்டும். 'இன்று உன்னால் நான் காலி, நாளை என்னால் நீ காலி!' என்பதுதான் சாராயப் போத்தல் சொன்ன சமாசாரம்! ஆக, இதன் ஆழ்ந்த புரிதலை இளைஞர்களின் உள்ளங்களில் பதித்துவிட்டால் இப்பொறியிலிருந்து அவர்களைப் பாதுகாக்கலாம்.

*(சுதா, வவுனியா)*

**கே : யானைத் தொல்லைகள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது! யானை தாக்கி இவ்வாண்டில் மட்டும் பலர் மரணித்துப்போய் விட்டார்கள்? இதைக் கேட்பதற்கு ஆட்களே இல்லையா?**

**ப :** யானை, ஆளை அடித்துக் கொன்று விட்டால், மரண விசாரணை அதிகாரி ஒருவர் மட்டும் 'யானை தாக்கியதால் மரணம்' என இறந்தவருக்கு மரணச் 'சான்றிதழ்' கொடுப்பார். இதுதான் தற்போதய நடைமுறை! யானையின் அட்டகாசம் தாங்கமுடியாமல் யானையைச் சுட்டுக் கொன்றால், ஐந்தோ ஆறோ பேர்கொண்ட மரண விசாரணைக் குழு நியமிக்கப்படுகிறது! சனநாயக சோசலியக் குடியரசின் சட்டம் இது! இதனைக் கேட்பதற்கு இதுவரையில் ஆளில்லை! யானைகளால், மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகள் பற்றி நாடாளுமன்றத்தில் நம்முடையவர்கள்கூட கதைக்கமாட்டார்கள்? ஏன் தெரியுமா? யானையைக் காப்பாற்றத்தானே படாதபாடு பட்டார்கள் - படுகிறார்கள் - படுவார்கள்! அப்ப, எப்படிச் சுதா யானைப் பிரச்சினை தீரும்!

*(காந்தன், கொழும்பு)*

**கே : தொடர்புசாதனங்கள் தொடர்புகளை அதிகப்படுத்தியிருக்கின்றது, ஆழப்படுத்தியிருக்கின்றது எனப் பலரும் சொல்லிக்கொள்கிறார்கள்? இது உண்மைதானா?**

**ப :** தொடர்புசாதனங்கள் தொடர்புகளை ஏற்படத்தியிருக்கிறது அதிகப்படுத்தியிருக்கிறது என்பது உண்மைதான்! ஆனால், தொலைத் தொடர்புசாதனங்கள் துாரத்தில் உள்ளவர்களை தொடர்பில் வைத்திருக்கிற அதேவேளை அருகில் உள்ளவர்களை அன்னியப்படுத்தியும் இருக்கிறது என்பதையும் மறுக்க முடியாது! அதாவது, துாரத்தில் உள்ளவர்கள் தொடர்பில் இருக்கிறார்கள், அருகில் உள்ளவர்கள் அன்னிபட்டுக் கிடக்கிறார்கள்! சரியா காந்தன்?

*(கலா, இளவாலை)*

**கே : இக்காலத்தில் பணம் பணம் என்று பலர் அலைந்து திரிகின்றார்களே! பணத்திற்காக எதையும் செய்யத் துணிகின்றார்களே! என்ன உலகமிது?**

**ப :** கலா, 'பணத்துக்காக எதையும் செய்யலாம், பணத்தைக் கொண்டு எதையும் செய்யலாம்' என்ற எண்ணம் மிகப் பயங்கரமானது. பல பாதகங்கள் நிகழ்வதற்கு இத்தகைய எண்ணப் போக்குகள் காரணமாக அமைகின்றன. பணம் பலருடைய நற்குணங்களைக் கெடுப்பதை இன்று பார்க்கலாம். 'பணத்துக்காகப் பிணமாய் வாழ்வதைவிட, மனதுக்காக மனிதனாய் வாழ்வது மேல்' என்ற உறுதிப்பாடு உருவாகினால் வாழ்வு உயரும், உன்னத நிலைபெறும். "செல்வம் செருப்பைப்போன்றது. அளவு குறைந்தால் நம்மைப் புண்படுத்துகிறது. அளவுக்கு அதிகமானால் நம்மைத் தடுமாற வைக்கிறது!" என்ற கூற்று பணத்திற்காக எதையும் செய்யத் துணிபவர்களுக்கு மிகமிக ஆழமான ஒரு வாழ்வியல் உண்மையை எடுத்துணர்த்துகிறது.

*(கவி, யாழ்ப்பாணம்)*

**கே : ஒற்றுமையும் ஒருமைப்பாடும் உலகில் ஓங்கிவளரும் நேரத்தில் சாதிப்பாகுபாடுகள் நம் மத்தியில் அதிகரித்துச் செல்கின்றதே! சாதியென்ற சாக்கடையிலிருந்து நம் சமூகம் மீளாதா?**

**ப :** சுதா, இவ்விடயம் குறித்த என்னுடைய இரு அனுபவங்களை இரு கவிதைகளில் ஒருமுறை எழுதியிருந்தேன். அக்கவிதைகள் உங்கள் கேள்விக்குப் பதிலாகவும், அதேவேளை சாதியென்ற கருத்துருவாக்கத்தின் சிறுமைத் தனத்தினைப் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் அமையும். முதலாவது 'மனித சாதி!' என்ற பெயரில் அமைந்தது: "'எச்சாதி இவன்சாதி?' என்றொருவர் எனைக் கேட்டார்! 'எச்சாதி இவன் சாதி' எனப் பார்த்தா வைத்தியம் செய்கிறாய்? 'எச்சாதி இவன்சாதி' எனப் பார்த்தா இரத்ததானம் கேட்கிறாய்? 'எச்சாதி இவன்சாதி' எனப் பார்த்தா நல்லாசிரியனைத் தேடுகிறாய்? 'எச்சாதி இவன்சாதி' எனப் பார்த்தா சலுகைக்காய் ஏங்குகிறாய்? 'எச்சாதி இவன்சாதி' எனப் பார்த்தா உதவிக்கு அழைக்கிறாய்? 'எச்சாதி இவன் சாதி' எனப் பார்த்தா கடனுக்காய் கையேந்துகிறாய்? 'எச்சாதி இவன்சாதி' எனப் பார்த்தா வாக்குப்பிச்சை கேட்கிறாய்? 'எச்சாதி இவன்சாதி?' என்றவருக்கு "எச்சாதி உன் சாதி அச்சாதி அவன்சாதி" என்பதுதான் என்பதில்!"

இரண்டாவது கவிதை, 'சோசலிசமும் சாதிசமும்!' என்ற தலைப்பில் வந்தது.

"எங்கள் நாட்டில்தான்/ கூடியிருந்து/ குடிக்கும்போது/ 'சோசலிசம்' பேசுவார்கள்!/ விடிந்ததும்/ வெறி முறிந்ததும்/ 'சாதிசம்' பார்ப்பார்கள்!"

எப்படியிருக்கிறது கவிதைகள், உங்கள் கேள்விக்கான என் பதில். பிடிச்சிருக்கா?

*(விடலை, மன்னார்)*

**கே : வயது 25 ஆகின்றது. கல்யாணம் செய்துகொள்ளலாமா அல்லது சில ஆண்டுகள் சென்றபின் செய்யட்டுமா?**

**ப :** பதில் இரண்டு கம்பளி போர்த்தியும் குளிரும் பாருங்க அப்பதான் தோன்றும் ஏன்டா இன்னும் நமக்குத் திருமணம் ஆகயில்ல என்று! பொண்டாட்டி கேக்கிற கேள்விக்கு பதில்சொல்ல முடியாம 'ஏசி றுமில்' வேர்க்கும் பாருங்க, அப்பதான் தோன்றும் ஏன்டா கல்யாணம் பண்ணிக் கிட்டேன் என்று! என யாரோ ஒருவர் குறிப்பிட்டது சரியான இடத்தில் உதவி செய்திருக்கிறது.

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு sms, viber அல்லது whatsupக்கோ அனுப்பி வைக்கலாம்.**

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

# இணையத்தளம்




# மனித உணர்வுகளில் ஏற்படுத்தும் மாற்றங்கள்

அருட்சகோதரி றோமலா அஸ்ரவி (HC)

நாம் இணையத்தளத்தைப் பயன்படுத்தும் முறைகளில் நமது மூளைகளும் மறு இணைப்பு பெறுகின்றன. வலைத்தள பயனாளிக-ளின் மூளைகள் கூகுள் தேடல்களில் அனுபவமுள்ள பயனாளிகளின் மூளைகள் இடப்புற முன் மூளையைப் பரவலாகப் பயன்படுத்துகின்றனர். புதியவர்களோ இந்தப் பகுதியை சிறிதளவே பயன்படுத்துகிறார்கள்.

புதிய வலைத்தளப் பயனா-ளிகளின் முதல் ஐந்து நாட்களில் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது கூகுளில் தேடினால் தான் முடியும். ஆறாம் நாளில் அவர்களது மூளைகள் இணையத்தளத்தினை பயன்படுத்தும் போது விரைவாக செயற்படுவதை உணர்கின்றனர். மூளையின் கட்டமைப்பு ஐந்து நாட்களில் தானாக மாறிவிடுகிறது. நாம்

இணையத்தளங்களில் தேடியறிவது நம் மூளைக்கு பல தொடர் பயிற்சியைத் தருகின்றன. தகவல்களை தேடியறியும் போது எமது அறிவு வளர்கின்றது. உண்மையில் தகவல்களையும், விளம்பரத் தகவல்களையும் பிரித்தறிய முடிகின்றது. இணையத்தளத்தில் நாம் பெறுகின்ற தகவல்கள் பயனுள்ளதா? பதிவிறக்கம் செய்யக்கூடியனவா என சரிபார்த்துக்கொள்ள முடியும்.

இத்தகைய செயற்பாடுகளை எமது மூளை செய்யும் போது எமது சிந்தனைக்குரிய நரம்புகள் பெரிதாக வளரும். எமது மூளை எதனை கூடுதலாக பழகி உள்ளதோ அதையே அதிகம் பயன்படுத்துகின்றது. நமது மூளை இணையத்தளத்தில் சொயற்படும் வழிகளில் நரம்பியல் தன்மைகளைப் பெறுகின்றது.

மூளையின் செயற்திறன் நினைவாற்றலில் சிறு விரிவாக்கம் செய்வதால் விரைந்து செயற்படவும் சிக்கல்களுக்கு தீர்வு காணவும் இயலும். முதியவர்கள் இணையத்தளத்தைப் பயன்படுத்துவதால் தங்கள் மனங்களை கூர்மையாக்கலாம்.

ஆனாலும் இணையத்தளங்கள் எமது மூளையில் எதிர்மறை விளைவு-களையும் உருவாக்கும். நாம் பெற்றுக்கொள்ளும் முழுத் தகவலையும் கற்றுக்கொள்ளும் திறன் எமது மூளைக்கு இல்லை. நமது கவனத்தை முழுவதுமாக செலுத்தி ஆழ்ந்து சிந்தித்து படிப்பது எளிதான செயல் அல்ல. இணையத்தளத்தில் அதிகநேரம் செலவிட்டாலும் ஆழமான படிப்பிற்கு குறைந்த நேரமே பயன்படுகின்றது.

அத்துடன் இணையத்தளம் நேர்மறையான விளைவுகளை யும் உருவாக்குகிறது. எமது மனதை இளசச் செய்யும் செயற்பாடுகளையும் செய்கின்றது. இரு வாரங்கள் மனதை இளசச் செய்யும் பயிற்சியில் ஈடுபடுபவர்களின் நரம்பியல் செயற்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களினால் மூளையின் அமைப்பிலும் மாற்றம் ஏற்படுகின்றது என்பது ஆய்வாளர்களின் ஆய்வு முடிவாகும். இதனை MRI காந்தவியல் வரைபுகள் உறுதிப்படுத்துகின்றன.

இரக்க உணர்வைத் தூண்டும் பயிற்சிகள் நமது மூளையில் மாற்றத்தை ஏற்படுத்தி நம்மில் இரக்க உணர்வை அதிகம் வெளிப்படுத்த செய்கின்றது.

இந்நிலையில் நாம் தகவல் தேடிக்கொள்ளும் கூகுள் செய்தியை எத்தனை தடவை நாளாந்தம் பார்க்கின்றோம். நமது விரைவுப் பார்வையினால் பல செய்திகளை அறிகின்றோம். நாம் அறியும் தகவல்களை நன்கு உணர இன்னும் மெதுவான வழி-முறைகளைப் பின்பற்றுவோமானால் நாம் கூடிய இரக்கம் உடையவர்களாக மாறமுடியும். அத்துடன் பிறர் மீதான ஆர்வம் நமது மூளையை மேலும் பழக்கப்படுத்துவதற்குரிய வழிமுறை-களை காண எம்மை அழைத்து நிற்கும்.

எனவே இணையத்தளத்தை நிதானமுடனும், கட்டுப்பாட்டுடனும் பயன்படுத்த எம்மை பழக்கப்படுத்திக் கொள்வோம். நம்மில் கனிவு, இரக்கம், தாழ்மை, மென்மை, பொறுமை என்னும் பண்புகள் வளரவேண்டும். இதனால் இணையத்தளத்துடன் மென்மையான மனங்கொண்ட மனித சமூகம் உருவாக முடியும்.

# இளைஞரில் ஆன்மீகம்



செல்வன். ரெ. மரின் றொமன்சன்
புனித வளனார் அ.ம.தி. குருமடம்

மனிதர் இறைவனின் மகத்தான கைவினைப்பாடு. கோடிக் கணக்கிலே எண்ண இயலாத தனி மனிதர்களை ஒப்பிடும் போது எல்லோரும் தனித் தன்மை பெற்றவர்கள். இப்படிப்பட்ட மனித வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் விரும்பியோ விரும்பாமலோ பின்வரும் கால கட்டங்களை கடந்து தான் ஆக வேண்டும். அவை குழந்தைப்பருவம், பிள்ளைப்பருவம், இளமைப்பருவம், முதுமைப்பருவம் என்பனவாகும். இவற்றுள் இளமைப்பருவம் ஏனைய எல்லா காலங்களையும் விட தனித்தன்மையும் சிறப்பும் வாய்ந்ததொன்றாகும். பல அனுபவங்களை வாழ்க்கையில் கற்றுக் கொள்ளுகிற காலம். ஷேக்ஸ்பியர் மிக அழகாக கூறுவார், "கோடையில் வியர்ப்பதும், குளிர் காலத்தில் விறைப்பதும், சிரிப்பூட்டினால் சிரிப்பதும், கூர் பொருளால் குத்தினால் குருதி சிந்துவதும், கத்தியால் காயமடைவதும், மருந்தினால் குணமடைவதும் எல்லோருடைய அனுபவம்". இளமைப் பருவமும் இதில் அடங்கும்

அவ்வகையில் இளைஞரில் ஆன்மீகம் என்று சொல்லும் பொழுது நம் இளைஞர்கள் முற்றுமுழுதாக ஆன்மீகவாதிகள் என்று சொல்லி விடவும் முடியாது, கடவுள் பக்தி அற்றவர்கள் என்று சொல்லி விடவும் முடியாது. இளைஞரில் ஆன்மீகம் என்ற பார்வையில் திருவிவிலியம் இளைஞர்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் இன்று சமுதாயம் என்ற நதியில் இளைஞர்களின் ஓட்டம், அவர்களிடம் உள்ள ஆன்மீக நாட்டம், மேலும் இறைவனின் வழியில் வேரூன்ற அவர்கள் இன்னும் என்ன செய்ய வேண்டும்? என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இளைஞர்கள் பற்றிய கருத்துக்கள் திருவிவிலியத்தில் முக்கியத்துவப்பட்டு இருப்பதை அவதானிக்கலாம். அந்த வகையில் பழைய ஏற்பாட்டிலும் சரி புதிய ஏற்பாட்டிலும் சரி இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற முக்கியத்துவம் அவர்கள் எப்படி வாழ வேண்டும், என்ன செய்யவேண்டும், எவ்வாறான முன்மாதிரிகைகளை பிறருக்குக் கொடுக்க முடியும் என்பதை கதைகள் ஊடாகவும் உவமைகளின் ஊடாகவும் நமக்கு தெளிவுப்படுத்தப்பட்டிருக்கின்றது. தொ.நூ : 37ம் அதிகாரத்தில் யோசேப்பு பற்றி கூறப்பட்டிருக்கிறது. அவருடைய இறை பக்தி, கனவுக்கு விளக்கம் கூறும் கொடை என்பவை அவரை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வந்தது.

நீ.மொ 01:7-19 வரையான பகுதியில் இளைஞர்களுக்கு என்று நல்லுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த உலகம் எப்படிப்பட்டது என்பது பற்றியும், பாவம் பற்றியும், பணம் பற்றியும் மிக அழகாக இளைஞர்களுக்கு எடுத்துக் கூறுகின்றது. (சபை உரையாளர் 11:9-10.12:1-18) வரையான பகுதியில் இளைமைப் பருவ மகிழ்ச்சி பற்றியும் "வாழ்க்கை எனக்கு இன்பம் தரவில்லையே என்று சொல்லக்கூடிய துயர நாள்களும் ஆண்டுகளும் வருமுன் அவரை உள்ளத்திலே நினை" என்று குறிப்பிடுவதன் மூலம் இளைமைப் பருவத்தில் செய்யப்பட வேண்டியவை பற்றி அழகுபட எடுத்தியம்பப்பட்டிருக்கின்றது. அடுத்து (2 குறி : அதி 1), (1அரசர்கள் 1ம்,2ம்,3ம் அதிகாரங்கள்) இளைஞனான சாலமோனைப் பற்றியும் அவரது ஞானத்தைப் பற்றியும் மிக தெளிவாக எடுத்துக் கூறுகிறது. (1சாமு 10ம்அதிகாரம்) தாவீது அரசன் பற்றியும் (வி.ப 1ம், 2ம்அதிகாரம்) மோசே என்ற இளைஞனின் தலைமைத்துவத்தின் கீழ் முழு இஸ்ராயேல் இனமும் வழிநடத்தப்பட்டதை நமக்கு நினைவுப்படுத்துகிறது. இவ்வாறு பழைய ஏற்பாட்டில் ஏராள-மான இளைஞர்களின் வாழ்க்கைகள், அனுபவங்கள் நமக்கு பாடங்களாக தரப்பட்டிருக்கின்றன.

புதிய ஏற்பாடு இளைஞர்களின் வாழ்வுக்கு அச்சாணியாகவும் அடித்தளமாகவும் இருக்கின்றனது. மத்19:10-30 வரையான வார்த்தைப்பகுதிகள் இயேசுவைப் பின்பற்ற விரும்பிய செல்வரான இளைஞனைப் பற்றி குறிப்பிடுகின்றது. இறைவனைப் பின்பற்ற விரும்பிய இளைஞர்கள் எவ்வாறு அவரை பின்பற்ற வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. அதை விட முக்கியமாக இளைஞர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று சொல்லி தனது தலைமைத்துவத்தினூடாக வாழ்ந்து காட்டித் தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்த இயேசுக்கிறிஸ்து கூட இளைஞனாக இருந்தே இவற்றையெல்லாம் சாதித்தார்.

இன்றைய சமுதாயத்தில் இளைஞர்களின் வாழ்க்கைப் பின்னோட்டத்தில் வாழ்க்கை இன்று பலருக்கு பிடிப்பில்லாத அம்சமாகவே தோன்றுகின்றது. இன்னும் சிலர் பிறந்தோம் வாழ்கிறோம் என இருக்கின்றார்கள். இன்னும் சிலரோ தம் வாழ்வை பிறர் பாடமாகக் கொள்ள வேண்டும் என்று சொல்லி வாழ்ந்து சாதித்துக் காட்டுகின்றனர். இவ் வகைக்குள் இன்று பல இளைஞர்கள் உள்ளடக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்று பெரும்பாலான இளைஞர்கள் தொழிலுக்காக போராடிக் கொண்டு இருக்கின்றனர். பல வேலையில்லாப் பட்டதாரிகள் வேலை வாய்ப்புகளுக்காக போராடுகின்றனர், அரச ஊழியர்கள் சம்பள உயர்வு வேண்டிப் போராடுகின்றனர். மேலும் பலர் தமக்கு நிரந்தர நியமனம் வேண்டிப் போராடுகின்றனர், இன்னும் பலர் அரசியல் உரிமைக்காக அரசியல் தீர்வுகளுக்காக போராடுகின்றனர், இன்னும் சிலர் அரசியல் கைதிகளின் விடுவிப்புக்களுக்காக போராடுகின்றனர், இன்னும் சிலர் நில அபகரிப்புகளுக்கு எதிராக போராடுகின்றனர், இன்னும் சிலர் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடிப் போராடுகின்றனர்.

இப்படிப்பட்ட இளைஞர்களின் ஆன்மீக தாகம் எப்படி இருக்கின்றது என்பது பற்றி ஆராய்ந்தால் பல இளைஞர்களில் ஆன்மீக வாஞ்சை உள்ளதென கூறவேண்டும்.

"இளைஞர்களின் விசுவாசமும் அழைத்தலுக்கான தீர்மானமும்" என்னும் தலைப்பில் இளையோரை மையப் படுத்தி இளையோருக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றதென்றால் இன்றைய இளைஞர்களின் முக்கியத்துவம் உணரப்படுவதினாலாகும். இளைஞர்களின் ஆன்மீக வாழ்வில் அவர்களது நாட்டம் எவ்வாறு உள்ளது என்பது பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம். இன்று இளைஞர்களில் உள்ள தெய்வ பயம், பக்தி என்பவற்றைப் பற்றி மறந்தும் மறுத்தும் பேசி விடக்கூடாது. ஆம், இளைஞர்கள் இல்லாமல் இன்று திருச்சபை இல்லை என்பது முற்றிலும் மறுக்க முடியாத உண்மையாகும். இன்று ஆலயங்களிலும், பங்குகளிலும், மறைமாவட்ட ரீதியிலும் இளைஞர்களின் பங்களிப்பு இல்லாமல் எதுவும் நிறைவாக நடந்து விட முடியாது. எம்மில் பல இளைஞர்கள் நாள்தோறும் திருப்பலிக்கு செல்வதை வழக்கமாகக் கொள்கின்றனர். அதுமட்டுமல்லாது எம்மில் பல இளைஞர்கள் ஆன்மீக தாகம் உள்ளவர்களாகவே உள்ளனர்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் இந்த மண்ணில் பிறக்கையிலே" என்று பாடல் வரி ஒன்று உண்டு. ஆனால் அவனு(ளு)டைய இளமையே அவன(ள)து வாழ்வை மாற்றியமைக்கின்றது எனப் பலர் கூறுவார்கள். "இளைஞனிடமாவது ஆன்மீகமாவது" என்று சமூகத்தில் ஒரு பார்வை உண்டு. ஏன் இன்றும் இளைஞர்கள் திருப்பலியில் பங்கு பெறுகிறார்கள் நற்கருணை ஆண்டவரை சுவைக்கின்றார்கள். இவை இளைஞரின் ஆன்மீகம் இல்லையா?

ஆன்மீகமில்லாதவன் மனிதனல்ல. அந்தவகையில் எல்லோரிடமும் ஆன்மீகம் இருக்கின்றது. சமூகத்தில் பல சாவல்களுக்குட்படும் இளைஞர் மட்டில் ஆன்மீகம் காணப்படுகின்றது. ஒரு சிலருடைய சொற்களைக் கேட்டு இளைஞர்களை இழிவுபடுத்தாமல் அவர்களும் மனிதர்களே என்ற உண்மையை ஏற்றுக் கொள்வோம். இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டு பதினெட்டு வயதிலே இறையனுபவத்தை பெற்று மனம்மாறி "ஆண்டவரே நீர் யார்?" என்று அவரிடம் வினவ ஆண்டவரின் பதிலின் மூலம் அவருடன் உறவாடி உலகின் கடையெல்லை வரை நற்செய்தியைப் போதிக்க அழைக்கப்பட்டவரான புனித பவுலும் இளைஞனே. ஆகவே இளைஞர்களிடமும் ஆன்மீகம் உண்டு. அவர்களும் மறைபரப்பாளராகலாம். ஒவ்வொரு இளைஞனும் அழைப்பின் குரலுக்கு செவிமடுத்து அழைத்தல் ஆண்டுக்கு அர்த்தம் கொடுக்கவேண்டும்.



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

**யாழ்ப்பாணத் திருத்தூது மாவட்டத்தில் மகா ஞானொடுக்கத்தின் தேவை - நடைபெற்ற முறை - ஏற்பட்ட மாற்றங்கள்**

**உறங்கல் நிலையில் உள்ள இறை நம்பிக்கையுள்ளவர்கள்**

இலங்கையில் புனித ஜோசப்வாஸ் அடிகளாரின் வருகையின் பின் படிப்படியாக ஏறுமுகத்தில் சென்று கொண்டிருந்த மறைப்பணியும், கத்தோலிக்கரின் நம்பிக்கை வாழ்வும் 18ம் நூற்றாண்டு முடிவு வரை தடைச்சடடங்கள் மத்தியிலும் சீராக வளர்ச்சியடைந்து கொண்டுதான் சென்றது.

1796ம் ஆண்டில் இலங்கைக்கு ஆங்கிலேயரின் வருகையின் பின், குறிப்பாக 19ம் நூற்றாண்டு ஆரம்பத்திலிருந்து பலவிதமான மாற்றங்கள் ஏற்பட்டன. இம் மாற்றங்களுள் சிலவற்றால் ஏறுமுகத்திலிருந்த கத்தோலிக்க சமயத்தின் செயற்பாடுகள், வளர்ச்சி போன்றவை எவ்வாறு இறங்குமுகம் கண்டன என்று முன்னர் பார்த்தோம். 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து படிப்படியாகக் குறைந்து வந்த ஒரட்டோரியன் சபைக்குருக்களின் வருகை. இதனால் இங்கு பணியாற்றிக் கொண்டிருந்தவர்களுக்கிருந்த கூடுதல் பணிச் சுமை, இவர்களது மேலதிகாரிகள் (ஆயர்கள்) போன்றவர்களது வருகை, உற்சாகம் வழங்கல், வழிகாட்டுதல் ஆகியவை நின்று போனமை, குருக்கள் பற்றாக்குறையால் கத்தோலிக்கருக்குத் தேவையான மறையறிவு வழங்கல், அருளடையாளங்களை வழங்க முடியாமை போன்றவற்றைப்பற்றி முன்னர் விளக்கமாகப் பார்த்தோம்.

1848ம் ஆண்டு செமேரியா அடிகளின் தலைமையில் வந்த அமல மரித்தியாகிகள் சபையினர் தமது பணியின் ஆரம்பகாலத்திலேயே இப்பகுதிகளிலிருந்த கத்தோலிக்க மக்களின் மறையறிவு அடிப்படையிலேயே போதாதிருந்ததென்றும், அவர்களது மதக்கடமைகள் எல்லாம் வெளியாடம்பரங்கள். கொண்டாட்டங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையையும் அவதானித்திருந்ததையும் முன்னர் சுட்டிக்காட்டினோம். அதற்கு மேலாக திருச்சபைக்குள்ளே ஏற்பட்டிருந்த பிரிவினை (பத்ரொவாதோ- விசுவாசப்பரப்பதல் சபை)யும் மக்களைக் குழப்பி இடறலுக்கு உள்ளாக்கியிருந்தமையையும் அவதானித்தோம்.

கத்தோலிக்க மக்களை ஒரு நம்பிக்கையுள்ள, உரோமைத் திருப்பீடத்திற்குமட்டும்பிரமாணிக்கமாயுள்ளஒருதிரு அவையாக ஏற்படுத்த வேண்டிய கட்டாய தேவையிருந்தது. ஆயர் செமேரியாவின் காலத்தில் இது இடம் பெறாமல் போனாலும் இவரது காலத்தில் இடம் பெற்ற மகா ஞானொடுக்கங்களால் பிரிவினையின் தாக்கங்கள் குறையவும், அவை மேலும் பரவி இன்னும் பெரிய அளவில் இடறலாக ஏற்படுத்தப்படுவதும் மட்டுப்படுத்தப்பட்டது எனலாம்.

மகா ஞானொடுக்கத்தின் முழு நிகழ்ச்சி நிரலும் ஆயர் செமேரியாவினாலேயே வகுக்கப்பட்டது. ஊர்காவற்துறையில் முதலில் மகாஞானொடுக்கம் முன்னெடுக்கப்பட்ட போது நல்ல வரவேற்பு கிடைக்கவில்லை. இதனால் மகா ஞானொடுக்கத் திருப்பணியாளர் மனம் சோர்ந்து போகவில்லை. அவர்கள் முதலில் தமது செபங்களையும், ஒறுத்தல் முயற்சிகளையும் இரட்டிப்பாக்கினர். வீடுவீடாகச் சென்றுஅறிவுரைவழங்கினார்கள். என்ன செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தல்கள் கொடுத்தார்கள். ஏன் இரந்து வேண்டிக் கொண்டார்கள் என்றும் சொல்லலாம். ஆலயத்திலும், பொது இடங்களிலும் உரையாடல் - மறையுரைகளை (தர்க்கப் பிரசங்கம்) ஏற்பாடு செய்தார்கள். இங்கு இரண்டு குருக்கள் இதற்கென்று அமைக்கப்பட்டிருந்த இரு உயர் மேடைகளில் நின்ற வண்ணம் உரையாடுவார்கள். இவர்களுள் ஒருவர் ஒரு பணிவான கத்தோலிக்க சமயத்தைச் சாராதவரை பிரதிநிதித்துவப்படுத்துவார்.

இவர் மற்றவரிடம் கேட்டுத்தெளிவாவதற்கென ஒரு தொகுதி கேள்விகளை ஆயத்தம் செய்து வைத்திருப்பார். சாதாரண ஒரு குடிமகன் போல தனது கேள்வியைக்கேட்டுவிட்டு அமர்ந்த பின், மற்றவர் ஒரு கத்தோலிக்க குருவாக தமது பதிலை

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

வழங்குவார். ஒவ்வொரு கேள்விக்கும் பதிலை, கத்தோலிக்க நிலைப்பாட்டை உதாரணங்கள், புனிதர்கள், திருவிவிலியம் மற்றும் சான்றோரின் முன்னுதாரணங்கள் வழியாக விளக்குவார். இடைவேளைகளின் போது உரையாடப் படும் மையக்கருத்தோடு தொடர்புள்ள பாடல்கள் பாடப்படும். பிற்காலத்தில் இம்முறை மேலும் மெருகூட்டப்பட்டு வந்ததுடன் பலர் ஆர்வத்துடன் இந்நிகழ்விற்கு வரத் தொடங்கினார்கள்.

அத்தோடு குறிப்பிட்ட நேரங்களில் சிறுவர்களுக்கான மறைக்கல்வி, நல்லொழுக்க வகுப்புக்கள், முறையாக மறைக்கல்வி பெற்றிராத வளர்ந்தோருக்கான மறைக்கல்வி வகுப்புக்கள் ஆகியவையும் இடம் பெற்றன.

மக்களுக்கு நீதி வழங்கும் அமர்வுகளும் இடம்பெற்றன. தமக்கிடையே ஏதாவது கொடுக்கல்வாங்கல், காணிப்பிரச்சினை, குடும்பப்பிரச்சினை, வேறு ஏதாவது பிணக்குகள் இருந்தால் அவற்றையும் குருக்கள் தீர்த்து வைத்தார்கள். இது ஒரு சுலபமான காரியமாக இருக்கவில்லை. சாதாரணமான இதுபோன்ற மகாஞானொடுக்கங்கள் ஒரு மாத காலவரையறைக்குள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஆயினும் சில வேளைகளில் சில விசேட தேவைகளுக்காக இவை நீடிக்கப்பட்டதுமுண்டு. உதாரணமாக ஊர்காவற்துறையில் இடம் பெற்ற முதல் மகாஞானொடுக்கம் 1857ம் ஆண்டு செப்டெம்பர் 15ம் திகதி வியாகுல அன்னை திருநாளன்று ஆரம்பிக்க இருந்தது. ஆயினும் தவிர்க்க முடியாத சில காரணங்களால் இம் மகாஞானொடுக்கம் செப்டெம்பர் 18ம் திகதி தான் தொடங்கியது. பின்னர் ஒக்டோபர் மாதம் 22ம் திகதி முடிவடைவதாக அறிவிக்கப்பட்டாலும் பிந்தி வந்து மகாஞானொடுக்கத்தில் இணைந்தவர்களது நலனுக்காக இன்னும் 8 நாள் கூடுதலாக மகாஞானொடுக்கம் இடம்பெற்றது.

இம்மகாஞானொடுக்கங்களால் ஏற்பட்ட இன்னும் சில மாற்றங்களாக செயலிழந்த, இயங்காநிலையிலிருந்த பக்திசபைகள் மீண்டும் இயங்க வைக்கப்பட்டன. கோபதாபங்கள் களையப்பட்டன. மறைத்தளம் சீராக இயங்குவதற்கான ஒழுங்குமுறைகள் மீண்டும் புதிதாக வகுக்கப்பட்டன.

(தொடரும்...)

# “நற்செய்தியை வாழ்வாக்கி தூதுப்பணியை எமதாக்குவோம்”

மலர்ந்திடும் 2019ம் ஆண்டில் பொதுநிலையினராகிய நாம் அனைவரும் நற்செய்திப் பணியாளராக வாழ வளர திருச்சபை அழைப்பு விடுக்கிறது.

**“விடை தரும் விதைகள் இறை வார்த்தை”**

கிறிஸ்தவ வரலாற்றில் மக்களை இறைவன், இறைவன் பால் ஈர்க்க வைத்த மனித நேயத்துடன் வாழவைத்த இறைவார்த்தை, இன்று நம்மையும் பக்குவப்படுத்தி நற்செய்திப் பணியாளராகச் செயற்பட்டு நாம் வாழுகின்ற சூழமைவுகளில் அல்லலுறும் ஆன்மாக்களை ஆண்டவர் பால் ஆதாயமாக்க வேண்டிய பணிகள் இவ்வாண்டில் எம்மிடம் ஒப்படைக்கப்படுகிறது.

நல்ல மனநிலங்களாக எம்மைப் பக்குவப்படுத்தி இறைவார்த்தை விதைகளை நாம் ஏற்றுக் கொண்டால் நம்மால் நல்ல ஆற்றல்களை பயன்படுத்த முடியும். “நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்கள் உள்ளும நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்”. (யோவான் 15:7)

இறைவார்த்தை பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு 73 புத்தகங்கள் பழைய ஏற்பாடு 46 புத்தகங்கள். 1079 அதிகாரங்கள் 24, 836 வசனங்கள் எமக்கு அருள்வாக்காக, அமுதவாக்காக அருளப்பட்டுள்ளது. இறைவார்த்தையில் நிலைத்திருந்து அவற்றைக் கடைப் பிடித்து வந்தால் உண்மையின் சீடர்களாகச் செயற்பட்டு நற்செய்திப் பணியாளராகப் பணியாற்றுவீர்கள். இறைவார்த்தையை வாசிப்பதற்கு அதன் மேல் ஒரு ஆர்வம் மிக்க ஏக்கம் உருவாக்கம் வேண்டும். இறைவனைப் பற்றிய தேடல் எம்மில் இருக்க வேண்டும். “நீர் இன்றி வறண்ட தரிசு நிலம் போல என் உடல் உமக்காக ஏங்குகிறது”. (திருப்பாடல் 63:1) “கலைமான் நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பது போல் என் நெஞ்சம் உமக்காக ஏங்கித் தவிக்கிறது.” (திருப்பாடல் 42:1)

**“நாம் நற்செய்தியாக மாற வேண்டும்”**

நாம் வாழுகின்ற சூழமைவுகளில், பணியாற்றும் இடங்களில் இயேசுவின் சாட்சிகளாக இறைவார்த்தையை இதயத்தில் தாங்கியவர்களாக மக்கள் மத்தியில் நாம் திருமுகங்களாக மாற வேண்டும். நமது வாழ்வு பிறருக்கு நற்செய்தியாக மாற வேண்டும். எழுத, வாசிக்க முடியாதவர்களும் கூட எமது செயற்பாடுகளின் மூலமாகப் புரிந்து கொள்ள, உணர்ந்து கொள்ள வாய்ப்பாகும். நம்முடைய வாழ்வு, இயேசுவை பிரதிபலிக்கின்ற வாழ்க்கையாக அமைய வேண்டும். அடுத்தவர்கள் நம்மிலே இயேசுவைக் காண வேண்டும். உண்மைக்கு சாட்சி பகர்ந்து, நீதிக்குக் குரல் கொடுத்து பாதிக்கப்பட்ட நிலைகளில் இருந்து துன்பங்களை அனுபவிக்கின்றவர்களைத் தேடிச் சென்று ஆறுதல்படுத்த முயற்சிப்பது. இவ்வாறாக உங்கள் நற்செயல்களைக் கண்டு மக்கள் - உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வதற்காக உங்கள் ஒளி மனிதர்களை ஒதுக்குவதற்காக அல்ல மாறாக இறைவனுடைய மீட்பை உணர்ந்து அவரது குரலிற்கு செவிமடுப்பவர்களாக வாழ அவர்களைத் தூண்டுவதற்காகவே வாய்ப்புகள் கொடுக்கப்படுகிறது. உதாரணமாக பத்துத்தோழியர் உவமை (மத்.25:1-13), விதைப்பவன் உவமை (மத்.13:1-23), வயலில் தோன்றிய களைகள் உவமை (மத்.13:24-30) இந்த உவமைகள் மனிதர்கள் இறை வார்த்தையை கடைப்பிடிப்பவர்கள்,கடைப்பிடிக்காதவர்கள் என



**வன்னிவாழ் இதயம் ம. சூசைமுத்து**

இரண்டு வகையாகப் பிரிக்கிறது. இறைவார்த்தையை ஏற்றுக்கொள்வோர் இறைவனின் மீட்பைக் கண்டு கொள்பவர்களாகவும், இறைவார்த்தையின் பிரகாரம் வாழாதவர்களுக்கு இந்த உவமைகள் ஓர் அழைப்பாகவும் உணர்த்தப்படுகின்றது.

நாம் நிலத்தில் இருந்து நல்ல விளைச்சலைப் பெறுவதற்கு உழுதல், களையெடுத்தல், உரம் இடுதல், நீர்பாய்ச்சுதல் ஆகியவற்றைச் செய்வதோடு, விலங்குகள், பூச்சி புழுக்கள் ஆகிய எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு அவசியமாகிறது. அதேபோல், நல்ல உள்ளம் படைத்த நற்செய்தித் தூதுப்பணி செய்பவர்களுக்கு தீய பழக்க வழக்கங்கள்,பாவ நாட்டங்கள் ஆகிய களைகளை அகற்றி இறைவார்த்தையை அனுதினமும் வாசித்து தியானித்து செயற்படுத்தும் போது 1 திமோத்தேயு 4:5ல் குறிப்பிடுவதுபோல் அறிவுத்தெளிவோடு இருந்து துன்பங்களை ஏற்று நற்செய்திப் பணி ஆற்று. திருத்தொண்டுகளை முழுமையாகச்செய்.

இறைவனை நம்புவதற்கு இன்று அதிசயங்கள் தேவையில்லை இரக்கச் செயல்களே போதும். அன்பை, உண்மையை அறிவிப்பதற்கு அற்புதங்கள் தேவையில்லை. இறைவார்த்தையில் நிலைத்திருந்தால் போதும். இறைவார்த்தையில் நிலைத்து, இறை விருப்பத்தை நிறைவேற்றி அன்பு வழியில் வாழ்வதே ஆண்டவருக்கு ஏற்ற வாழ்வாகும்.

வேதாகமமே எமக்கு - கண்ணாடி
அருமையான போதனைகள்
அங்கு பலகோடி
அசையாத மேன்மையில்
வாழவைக்கும் நிலைகாட்டி
பொதுவான நன்மைகளைக்
காட்டும் திசைகாட்டி
நற்செய்திப் பணியை
ஊக்குவிக்கும் வழிகாட்டி

## 2ம் வருட நினைவஞ்சலி

பிறப்பு 24 - 02 - 1984



இறப்பு 25 - 01 - 2017

அமரர்

### திருமதி போல்வின் மேரி தமிழினி

"என் ஆன்மா ஆண்டவரின் கோவில் முற்றங்களுக்காக ஏங்கித்தவிக்கின்றது"

தி.பா. 84:2

இரக்கம் நிறைந்த இறைவா நிலையற்ற உலகில் வாழ்ந்து நிலையான வான் வீட்டிற்கு அழைத்துக் கொண்ட உமது பிள்ளை அமரர் திருமதி போல்வின் மேரி தமிழினி தாம் வாழ்ந்த காலத்தில் கட்டிக்கொண்ட பாவக்கறைகளை நீக்கி உமது பேரின்ப வீட்டில் இளைப்பாற அருள்புரிவீராக.

தேவமாதா கோவில் வீதி
தும்பளை
பருத்தித்துறை

AD/05/19

இவரது பிரிவால் துயருறும்
கணவன் :- போல்வின்
மகள்:- சுசானா

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 06 - 03 - 1935



தாயின் மடியில் 28 - 01 - 2012

AD/06/19

அமரர்

### திரு ஜேக்கப் சுசைதாஸ்

[ஓய்வு பெற்ற அதிபர்]

"கடவுள் கொடுக்கும் அருள்கொடை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு இணைந்து வாழும் நிலைவாழ்வு"

[யோவா 6:23]

ஊறாலை கிழக்கு
ஊறாலை

என்றும் மறவா
மனைவி, பிள்ளைகள்

## 31ம் நாள் நினைவலைகள்

பிறப்பு 04 - 02 - 1917



இறப்பு 18 - 12 - 2018

அமரர்

### சில்வெஸ்திரி தீத்தூஸ்

"உயிர்ப்பும் உயிரும் நானே,
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

கருவிழி நனைகின்றது – எம்
குல விளக்கு துமிலுதென்று
வழி ஒன்று சொல்லித்தர – எமக்கு
ஒளி ஒன்று இல்லையென்று
நூற்றாண்டு கண்ட மாமனிதா – வற்றாத
ஊற்றான விசுவாசியானவா
எறும்பு போல் உழைத்த இரும்பு மனிதா
விரும்பியே வருவோம் தரிசிக்க
இறையடி சென்று சாந்தி பெற
வரமொன்று கேட்கின்றோம் தினந்தோறும்
மறுபடியும் சந்திப்போம் மறு உலகில்

உம் ஆன்மா இறைவன் பாதம் இளைப்பாற அனுதினம் செபிக்கின்றோம்

AD/01/19

குழந்தை யேசு கோவிலடி
ஆலடி பொலிகண்டி
வல்வெட்டித்துறை

குடும்பத்தினர்


## இறை ஊக்கத்தினால்.....

(7ம் பக்கத் தொடர்ச்சி...)

அப்போது தான் நான் உணர்ந்து கொண்டேன் கடவுள் என்னை இயக்குகின்றார் என்று.

**நீங்கள் வெளியீடு செய்த இசைப் படைப்புக்கள்..?**

பனிப்பூக்கள், உன்னை நினைத்தேன் தாயே, என் இதய நாதம்,நன்றியினால் பாடுகிறேன், என்இசையில் நீ, என்வாழ்வில் ஒளி நீ, ததேயு நாதம், தாளையம்பதிப்பூக்கள், படைத்தவன் மடியில், வந்தாரே வந்தாரே, என பதினொரு இசை இறுவட்டுக்களை வெளியீடு செய்துள்ளேன்.

**இவ் வெளியீடுகளில் குறிப்பிட்ட நோக்கம் இருந்ததா அது எந்தளவுக்கு வெற்றிபெற்றது.?**

ஆமாம் அதன் பெயர்களைப் பார்த்திருப்பீர்கள் பெரும்பாலும் அவை நான் இறைவனுக்குப் பாடுகின்ற பாடல்கள் என்ற தொனியிலேயே பெயர்களை அமைத்தேன். அத்துடன் இப்பாடல்களை ஈழத்திலேயே தயாரிக்கவேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தேன். ஒரு மாற்றத்திற்காக மட்டும் 'நன்றியினால் பாடுகிறேன்' இறுவட்டை இந்தியாவில் செய்தேன். அதுமட்டுமன்றி என்வாழ்வில் ஊக்கமாக இருந்த அருட்திரு அன்ரன் இராஜநாயகம்,அருட்திரு மகேந்திரன்,பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, அருட்திரு இருதயம் ஆகியோருக்கு நன்றியாக ஒவ்வொரு இறுவட்டையும் சமர்ப்பணம் செய்துள்ளேன். அது எல்லாவற்றுக்கும் காரணம் இறை ஊக்கம் தான்.இவை வெற்றிகரமாக அமைந்தது என்றெ நான் நினைக்கின்றேன் காரணம் எனது பாடல்களை இன்றும் மக்கள் விரும்பிக்கேட்கின்றார்கள். திருவழிபாட்டுப்பாடல் புத்தகத்தில் எனது பல பாடல்கள் உள்ளன. 70 பாடல்கள் வரை எழுதி இருக்கிறேன் 200 பாடல்கள் வரை பாடி இருக்கின்றேன் 150 பாடல்கள் வரை இசை அமைத்திருக்கின்றேன் 35 பாடகர்களை இசை உலகத்திற்கு அறிமுகம் செய்துள்ளேன். சுதர்சன், ரூபன், முரளி போன்றவர்கள் எனக்கு உதவினார்கள். இவற்றை வெளியிடுவதற்கும் பொருளாதார வளங்களை இறைவன் தந்தார்.

**தற்போதைய உங்களின் இசை முயற்சி யாது.?**

தற்போது சிறுவர் பாடல்களை இசை அமைத்துக்கொண்டிருக்கின்றேன். ஆரம்பிரிவு மாணவர்களுக்காக அவர்களின் பாடநூலில் உள்ள பாடல்களுக்கு இசை அமைக்கும் முயற்சியை மேற்கொண்டு வருகின்றேன் தேசிய கல்வி நிறுவகத்தின் ஒத்துழைப்புடன் அதனை செய்து கொண்டிருக்கின்றேன்.

**நாட்டுக்கூத்தின் வளர்ச்சியில் உங்களது பங்களிப்பு பற்றிக்கூறமுடியுமா.?**

கூத்துக்கலையை பொறுத்தவரை எனக்கு சிறியவயதில் இருந்தே அதில் பரிச்சயம் இருந்தாலும் திருமறைக்கலாமன்றத்தில் அண்ணவியார் பேக்மன் ஜெயராஜா அவர்களைத்தான் எனது குரு என்று கூறுவேன். அவரிடம் தான் நான் கூத்தின் நுட்பங்களை முறையாகக்கற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது அவரது நெறியாள்கையில், சோழன் மகன் தேவசகாயம் பிள்ளை, கம்பன் மகன், அனைத்தும் அவரே போன்ற பல கூத்துக்களில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்தேன். இராஜபாட் பாத்திரத்தினை நான் சிறப்பாக செய்வதாக பலரும் பாராட்டுகின்றார்கள். அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு பல கூத்துக்களையும் பயிற்றுவித்து அவை மாகாண மட்டத்தில் முதற் பரிசைப்பெற்றுள்ளன. தாசீசியஸ் எனது சித்தப்பா முறையானவர்.தற்போது லண்டனில் வசித்து வருகின்றார். அவருக்கு என்னிலே மிகுந்து மதிப்பு உண்டு. அண்மையில் அவர் 'இராகம் தாளம் பாவம் கொடுத்து பாடி நடிக்கக்கூடிய பல அண்ணவிமாரை பாரத்ததாகவும் அவர்களில் எனது ஆற்றல் சிறப்பாக இருந்ததாக கூறிபாராட்டியதுடன் கூத்துப் பாடல்களை வெளிநாட்டவர்களுக்கு பயிற்றுவிப்பதற்காக ஒரு இறுவட்டை செய்து அனுப்பும்படி கேட்டிருந்தார். நான் இராகத்தை எப்படி அறிமுகம் செய்யலாம் எப்படி கற்றுக் கொடுக்கலாம் எப்படி இராகத்தோடு பாடலாம் அதனை கூத்திற்கு வாத்தியங்களோடு எப்படிப்பாடலாம் என நான்கு முறைகளில் ஒலிப்பதிவு செய்து அனுப்பினேன் தேவசகாயம்பிள்ளை எஸ்தாக்கியார் கூத்துக்களில் இருந்து 32 பாடல்களை அவ்வாறு பாடி ஒலிப்பதிவுசெய்து அனுப்பியுள்ளேன்.அவர் அதனைப்பாராட்டியுள்ளார்.

**கலைத்துறையில் தங்களுக்கு கிடைத்த விருதுகள் பாராட்டுக்கள் ?**

நான் என்றும் விருதுகளுக்காக பணியாற்றுபவன் அல்ல. இறைவன் எனக்குத்தந்த தாலந்துகளை என்னால் இயன்றவரை விருத்தி செய்து சமூகத்திற்குப் பயன்தரும் வகையில் பணிசெய்து வருகின்றேன். எனின் பல விருதுகள் பாராட்டுக்களை இறைவன் எனக்குத் தந்துள்ளான்.. வட இலங்கை சங்கீதசபையினால் 'நாடகக்கலா வித்தகர்' என்ற விருதும் திருமறைக் கலாமன்றத்தினால் 'கலைஞானச்செல்வன்' 'கலை ஞானபூரணன்', விருதுகளும் பிரான்சில் 'இசைஞன்' என்ற விருதும், இளவாலையில் ' கலைஞன்', மற்றும் யாழ் மாநகர சபையால் கலை பங்காளிப்பாளன் விருதும் வழங்கப்பெற்றன. அண்மையில் கிறிஸ்தவ கலாசார அமைச்சு 'தர்மபிரகாஸ்வர' என்ற தேசிய விருதினையும் வழங்கினார்கள். ●



பாண்டியந்தழ்வு பங்கு இளையோரினால் பாண்டியந்தழ்வு புனித அன்னாள் ஆலய வளாகத்தில் இளையோர் கிறிஸ்மஸ் சங்கமம் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வு பங்குதந்தை அருட்திரு மவுலிஸ் அடிகளாரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

## மனவளக்கலை யோகா தவமையம் திறப்பு விழா

எதிர்வரும் 21.01.2019 திங்கட்கிழமை "மனவளக்கலை யோகா தவ மையம்" பழைய தபாற்கந்தோர் வீதி, கோப்பாய் தெற்கில் அமைந்துள்ள தவ மையத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

தவ மையத்தின் தலைவி திருமதி அ.வேதநாயகம் அவர்களால் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட உடல் நலத்திற்கான எளிய முறை உடற்பயிற்சிகளும் தியானப் பயிற்சிகளும், உயிர்வாழ்வதற்கான காயகல்ப பயிற்சியும், நட்பு நலத்திற்கான அகத்தாய்வுப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

சிறப்பாக யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் அறங்காவலர்களும், துணைப் பேராசிரியர்களும் தென்னிந்தியாவிலிருந்து வருகைதரும் பேராசிரியர்களும் பயிற்கிகளை வழங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.


## விண்ணக வாழ்வின் 13ம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 13 - 06 - 1913



மறைவு 13 - 01 - 2006

### அமரர் மருத்தீன் அந்தோனிப் பர்னாந்து

[பொன்னுத்தம்பி]

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் குடியிருக்க வேண்டும்"

(தி.பா.27:4)

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் அன்புக்கு இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எம் வாழ்வில் ஒளியேற்றிய எம் அன்பு ஐயாவே! நீர் இறைவனுடன் இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்.

5ம் வட்டாரம்
மண்டைதீவு

AD/03/19

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## Holy cross School of Health Science Diploma in Nursing

பயிற்சி நெறி காலம் : 3 வருடங்கள்

விண்ணப்ப முடிவுத்திகதி : 20.02.2019

கா.பொ.த உயர்தரத்தில் சித்தி அடைந்தவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையினை திருச்சிலுவை சுகாதார விஞ்ஞான பாடசாலை, இல 767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். என்னும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

பணிப்பாளர்

தொ.பே.இல. 021 222 2423
077 115 9391

## நீதியை, நீதியை மட்டுமே பின்பற்று

கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரக் கருப்பொருள்

வருடா வருடம் ஜனவரி மாதம் 18ம் திகதி முதல் 25ம் திகதி வரை அனுசரிக்கப்படும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்துக்கான இவ்வாண்டின் கருப்பொருளாக "நீதியை, நீதியை மட்டுமே பின்பற்று" (Justice and only Justice you shall follow) என்ற கருப்பொருள் அறிவிக்கப்பட்டுள்ளது. நீதி மட்டும் பின்பற்றப்பட்டால் ஒன்றிப்பு தானாக விளையும் என்பதே இக் கருப்பொருள் தரப்பட்டதன் நோக்கமாகும்.

மேற்படி ஒன்றிப்பு வாரத்தில் பிரிவினை சபைகளோடு இணைந்து கத்தோலிக்க திரு அவையால் பல செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன. எமது யாழ். மறைமாவட்டத்தின் கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆணைக்குழுவினால் இவ் வாரத்தில் பல ஒன்றிப்பு வழிபாடுகளும், ஒன்றிப்பு செயற்பாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந் நிகழ்வுகளை யாழ். மறைமாவட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்பணி. I.P. தயாபரன் அடிகளார் நெறிப்படுத்தி வருகிறார்.

## சமயபாடம் வேறு - மறைக்கல்வி வேறு - முல்லைத்தீவில் குரு முதல்வர்



முல்லைத்தீவு மறைக்கோட்ட மறைக்கல்வி ஆணைக்குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டு ஜனவரி 5ம் திகதி முல்லைத்தீவு றோ.க.மகளிர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற ஒளிவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்கலாநிதி. P.J. ஜெபரட்ணம் அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலைகளின் நேரசூசிகளின்படி கற்பிக்கப்படுகின்ற சமயபாடம் ஏனைய பாடங்களைப்போல பரீட்சையை நோக்கமாகக் கொண்டு கற்பிக்கப்படுகின்றதென்றும், அதேவேளை பங்கு மறைக்கல்வி வகுப்புக்கள் ஆன்மீக வளர்ச்சியையும், ஒழுக்க நெறிகளையும், வாழ்வின் வழிகளையும் கற்பிக்கும் நோக்கம் கொண்டவையென்றும் குறிப்பிட்டு சமயபாடமும் மறைக்கல்வியும் ஒன்றல்ல என்பதை குரு முதல்வர் விளக்கினார். அத்துடன் சமயபாடத்தை விசுவாசம் இல்லாதவர்களும் கற்பிக்கலாம், விசுவாசம் இல்லாதவர்களும் படிக்கலாம், ஆனால் மறைக்கல்வி கறபிப்பவர்களுக்கும், கற்பவர்களுக்கும் ஆழமான விசுவாசம் அவசியம் என்றும் குரு முதல்வர் எடுத்துரைத்தார்.

இவ்வகையில் பங்குகளில் கற்பிக்கப்படும் மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய குரு முதல்வர் இதற்காகத் தங்களை பல தியாகங்கள் செய்து அர்ப்பணித்துப் பணியாற்றும் மறையாசிரியர்களுக்குத் தனது நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மறைக்கோட்டத்தின் பங்குகளின் பங்குத்தந்தையர்கள், மறையாசிரியர்கள், மறைக்கல்வி மாணவர்கள் பங்குகொண்ட இந்நிகழ்வை முல்லைத்தீவு மறைக்கோட்ட மறைக்கல்வி ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி E.S.C மரியதாஸ் அடிகளாரும், முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி S.A. ஜோர்ஜ் அடிகளாரும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

### பொது நிலையினரை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொது நிலையினர் எவ்வாறு தமது அழைத்தல்களை இனங்கண்டு திருஅவைக்குப் பணியாற்ற முடியும் என்பதற்கு புனித யோசவ்வாஸ் அடிகளோடு இணைந்து பணியாற்றிய பொதுநிலையினர் நமக்கு முன்னுதாரணம் என்று கூறிய ஆயர், தனது பணியை சிறப்பாக ஆற்ற புனித யோசவ்வாஸ் பொதுநிலையினரை நன்கு பயன்படுத்தினார் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இவ் அழைத்தல் ஆண்டு குறிப்பாக பொதுநிலையினர் தமது அழைத்தல்களை இனங்கண்டு தம்மை பணி வாழ்வுக்கு அர்ப்பணிக்கும் ஆண்டாக அமைய வேண்டும் என்றும் ஆயர் கேட்டுக் கொண்டார்.

கடந்த வருடம் அனுஷ்டிக்கப்பட்ட இளையோர் ஆண்டும் அன்றைய நாளில் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது.

## பனாமாவில் உலக இளையோர் தினம்

திருத்தந்தை பிரான்சிஸ் பங்கு பற்றும் உலக இளையோர் தினம் இம்மாதம் 22ம் திகதி முதல் 27ம் திகதிவரை மத்திய அமெரிக்க நாடான பனாமாவில் நடைபெறவுள்ளது. உலகின் பல பாகங்களிலிருந்தும் இலட்சக் கணக்கான வாலிபர், யுவதிகள் இதில் பங்குபெற தம்மை பதிவு செய்துள்ளார்கள். மறையறிவு நிகழ்வுகள், வழிபாடுகள், கருத்தரங்குகள், இசை நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள், திருத்தந்தை தலைமையிலான திருப்பலி என இளையோரைக் கவரும் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## காலக்குரல் கவிதை நூல் வெளியீடு



திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி எலிசபெத் அந்தோனிப்பிள்ளை எழுதிய கவிதைகளின் தொகுப்பாகிய "காலக்குரல்" என்ற நூலானது தை 10ம் திகதி அன்று திருக்குடும்ப மாகாண இல்ல மண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக மாகாணத் தலைவி அருட்சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ் கலந்துகொண்டு நூலை வெளியீடு செய்தார். வெளியீட்டுரையினை திரு. யோ.யோண்சன் ராஜ்குமார் அவர்களும், ஆய்வுரையினை யு. அஜந்தன் அவர்களும் நிகழ்த்தினர்.

அருட்சகோதரி அவர்கள் 1986 ஆம் ஆண்டிலிருந்து சங்கமம் போன்ற இதழ்களில் எழுதிய கவிதைகளையும், பத்தி எழுத்துக்களையும் கொண்ட தொகுப்பாக இந்நூல் காணப்படுகின்றது.

யுத்த காலத்தின் பல்வேறு அனுபவங்களை வெளிப்படுத்திய கவிதைகளை இக் கவிதை நூல் தாங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## புனித பிலிப்பு நேரியார் சிறார் பள்ளி அல்லைப்பிட்டியில் திறந்து வைப்பு



அல்லைப்பிட்டி புனித பிலிப்பு நேரியார் ஆலய வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பிலிப்பு நேரியார் சிறார் பள்ளியை யாழ். ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தை மாதம் 6ம் திகதி திறந்து வைத்தார்.

இப்புதிய சிறார் பள்ளி நிர்மாணப்பணிகளை அல்லைப்பிட்டிப் பங்குத்தந்தை அருட்பணி. ம. டேவிட் அடிகளார் சிறப்பாக மேற்கொண்டிருந்தார். நீண்ட காலத் தேவையாக இருந்த முன்பள்ளியானது அல்லைப்பிட்டி வாழ் மழலைகளுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

## இளவாலை இளையோர் ஒன்றியத்தின் விளையாட்டுப்போட்டி



இளவாலை பங்குத்தந்தை அருட்பணி. ம. யேசுரட்ணம் அடிகளாரின் நெறிப்படுத்தலில் இளவாலை புனித யூதா ததேயு ஆலய இளையோர் ஒன்றியத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த விளையாட்டுப் போட்டி ஆலய முன்றலில் தை 6ம் திகதி சிறப்பான முறையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி. அன்ரன் ஸ்ரீபன் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக பல் வைத்திய நிபுணர் ஆன் லாவன்யா செபஸ்ரியன் நிமால் அவர்களும், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் இளைஞர் சேவை அதிகாரி திரு. லோகநாதன் இரஜீவன் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள். சிறுவர்கள், இளையோர்கள், பெரியவர்களுக்கென பல விளையாட்டு நிகழ்வுகள் இதில் இடம் பெற்றன. இந்நிகழ்விற்கு இளையோர் மன்றத் தலைவர் செல்வன் அனோஜன் தலைமை தாங்கினார்.

## சமூகத் தொடர்பு ஆணையத்திற்கான புதிய கட்டட அடிக்கல் நாட்டல்



யாழ்ப்பாணம் மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் முகமாக இவ் ஆணைக்குழுவிற்கான புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு 20.12.2018 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு மறைக்கல்வி நடுநிலைய வளாகத்தில் நடைபெற்றது. மறைக்கல்வி நடுநிலைய வளாகத்தில் அமையவுள்ள இக்கட்டடத்திற்கான அடிகல்லை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை நாட்டி வைத்தார்.


புனித வளன்
கத்தோலிக்க அச்சகம்
புத்தகங்கள்
நினைவுமலர்கள்
போஸ்ரர்கள்
அழைப்பிதழ்கள்
பற்றுச் சீட்டுக்கள்
கலண்டர்கள்
ஸ்ரிக்கர்கள்
அலுவலக அச்சகத் தேவைகள்
பைண்டிங் வேலைகள்

தரமான வேலை
துரிதமான சேவை
நியாய விலை
இல.360,பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொ.இல : 021 222 2378


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2019ம் ஆண்டு தை மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.